பிப்ரவரி 2006

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



## உலக வங்கி உத்தரவு! உணவு மானியம் குறைப்பு!

# பரவும் பட்டினிச் சாவுகள்

படிப்பகம்

www.padippakam.com

## "கொலைகார 'கோக்'கைக் குடிக்காதே!"

# அமெரிக்க மாணவர்களின் 'கோக்' புறக்கணிப்பு இயக்கம்

"கொலைகார கோக்கைக் குடிக்காதே" - இது கேரளத்தின் பிளாச்சிமடாவிலும் தமிழகத்தின் நெல்லையிலும் எதிரொலிக்கும் போராட்டக் குரல் அல்ல. "கோக்"கின் தாயகமான அமெரிக்காவிலிருந்து இந்தப் போராட்டக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அமெரிக்க மாணவர்களால் தொடங்கப்பட்ட "கோக்" எதிர்ப்புப் பிரச்சார இயக்கத்தின் விளைவாக, இப்போது 10-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் - உயர்கல்விக் கழகங்களில் "கோக்" விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2004 நவம்பரில் மிச்சிகன் பல்கலைக்கழக மாணவர்கள் "கோக்" எதிர்ப்புப் பிரச்சார இயக்கத்தைத் தொடங்கி வைத்தனர். இந்தியாவில் கேரளத்தின் பிளாச்சிமடாவில் நிலத்தடி நீரை வரைமுறையின்றி உறிஞ்சி சுடுகாடாக்கியுள்ளதையும், கொலம்பியாவில் தொழிற்சங்க முன்னணியாளர்களைப் படுகொலை செய்து வருவதையும், இன்னும் பல நாடுகளில் தனது கொலைக்கரங்களை நீட்டியுள்ளதையும், எல்லாவற்றுக்கும் மேலாக பூச்சிக் கொல்லி மருந்துகளைக் கொண்டு குளிர்பானம் தயாரித்து விற்பதையும் எதிர்த்து அம்மாணவர்கள் பிரச்சாரம் செய்தனர். கலிபோர்னியா, நியூஜெர்சி, இல்லினாய்ஸ், மசசூட்ஸ் முதலான இதர பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து "கோக்"குடன் உறவை முறித்துக் கொள்வதற்கான கூட்டணி (CCCC) என்ற அமைப்பின் மூலம் விரிவாக பிரச்சார இயக்கத்தை தொடர்ந்து மேற்கொண்டனர். கல்லூரி வளாகத்திலேயே கொலைகார "கோக்"கிற்கு எதிராகப் பல வடிவங்களில் போராட்டங்களையும் நடத்தினர்.

மாணவர்களின் தொடர் போராட்டங்களின் விளைவாக, கடந்த ஜனவரியிலிருந்து மிச்சிகன் பல்கலைக்கழகம் உள்ளிட்டு 10-க்கும் மேற்பட்ட உயர் கல்விக் கழகங்களில் "கோக்" விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. பொங்கும் நுரையுடன் "என்ஜாய் கோக்", "ட்ரிங்க் கோக்" முதலான பளபளப்பான விளம்பரங்களுடன் கூடிய தானியங்கி "கோக்" விற்பனை நிலையங்கள் முடங்கிக் கிடக்கின்றன. இந்தியாவில் "கோக்", நிலத்தடி நீரை வரைமுறையின்றி உறிஞ்சி வறட்சியை ஏற்படுத்தியுள்ளதா? நச்சுக் கழிவுகளைக் கொட்டி நிலத்தையும் சுற்றுச் சூழலையும் நாசப்படுத்தியுள்ளதா என்பதைப் பற்றி மறுபரிசீலனை செய்த பிறகே விற்பனை செய்ய அனுமதிக்க முடியும் என்று மிச்சிகன் பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

தனது வியாபாரம் பாதிக்கப்படுவதைக் கண்டு பீதியடைந்த கோக், "இந்தியாவில் விவசாயத்திற்குப் பூச்சிக் கொல்லி மருந்துகளை அதிகமாகப் பயன்படுத்துவதால் அந்நாட்டு தண்ணீரே நஞ்சாகியுள்ளதே தவிர, கோக்கில் எவ்வித பூச்சிக் கொல்லி மருந்தும் இல்லை; நிலத்தடி நீரை கோக் உறிஞ்சுவது முன்பை விட இப்போது 24% குறைந்துவிட்டது; இயற்கையின் சீற்றத்தால் பிளாச்சிமடாவில் ஏற்பட்ட வறட்சியிலிருந்து மீள, மழைநீர் சேகரிப்பு திட்டங்களைச் செயல்படுத்துகிறோம்" என்றெல்லாம் கூசாமல் புளுகுகிறது.

ஏற்கெனவே "கோக்"கில் பூச்சிக் கொல்லி மருந்துகள் அதிகமாக உள்ளதென்று ஆய்வுகள் மூலம் வெளிக் கொணர்ந்த டெல்லியைச் சேர்ந்த விஞ்ஞானம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான கழகத்தின் (CSE) இயக்குனரான சுனிதா நாராயணன், "இது அப்பட்டமான பொய்!" என்று சாடுகிறார். "பிளாச்சிமடா வறண்டுபோய் நாசமானதற்குக் காரணம் யார் என்பதை நாடே நன்கறியும். அங்கே மழைநீர் சேகரித்து அதிலிருந்து கோக் தயாரிக்கப்படுவதாக கூறுவது மிகப் பெரிய மோசடி" என்று கோக்கின் தகிடுதத்தங்களை அம்பலப்படுத்துகிறார்.

அமெரிக்காவில் "கோக்" எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி வரும் மாணவர்கள், "பொய்கள், சதிகள், கொலைகள், வஞ்சகம், மோசடி நிறைந்ததுதான் கோக். அது பல ஏழை நாடுகளையும் மக்களையும் நாசமாக்கி விட்டது. நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குக் கொடூரமானது, கோக். அதைக் குடிப்பதும் ஆபத்தானது; அநீதியானது" என்று தமது வெஞ்சினத்தை வெளிப்படுத்துகின்றனர்.

அமெரிக்க மாணவர்கள் மட்டுமின்றி, அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரைச் சேர்ந்த இந்திய உதவியாதார மையம் எனும் அமைப்பினரும் "கோக்" எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். "இந்தியாவிலிருந்து கொலைகார கோக் வெளியேறாத வரை, இன்னும் பல அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கோக் புறக்கணிப்பு பரவவே செய்யும்" என்று உறுதியாகக் கூறுகிறார், இம்மையத்தைச் சேர்ந்த சிறீவத்சவா.

அமெரிக்க மாணவர்கள் கொலைகார "கோக்"கைப் புறக்கணித்து, தமது போராட்டத்தில் முதல் கட்ட வெற்றியைச் சாதித்து, உலகெங்கும் "கோக்"கிற்கு எதிராகப் போராடிவரும் மக்களுக்கு புதிய நம்பிக்கையை அளித்துள்ளனர். அமெரிக்க மாணவர்களின் "கோக்" புறக்கணிப்பு இயக்கமும், "கோக்"கிற்கு எதிரான பொதுக் கருத்தும், உலகெங்கும் "கோக்"கிற்கு எதிராகப் போராடிவரும் மக்களுக்கு இன்னுமொரு வலுவான ஆயுதமாகத் திகழவே செய்யும். தமிழகத்தில் "கோக்"கிற்கு எதிரான பிரச்சாரம் தடை செய்யப்பட்டு, "கோக்"கை எதிர்ப்போர் தீவிரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டு கைது செய்யப்பட்டாலும், ஓட்டுக் கட்சிகள் பொருள் பொதித்த மவுனத்துடன் "கோக்"கிற்குத் தமது விவசுவாசத்தைக் காட்டினாலும், "கோக்" கிற்கு எதிராகத் திரண்டு வரும் பொதுக்கருத்தும், அந்தக் கருத்திற்குச் செயல்வடிவம் தரவிருக்கும் மக்கள் போராட்டங்களும் காட்டுத் தீயாகப் பரவவே செய்யும். கொலைகார "கோக்"கை இப்புவிப்பரப்பிலிருந்தே விரட்டியடிக்கும் விடுதலைப் போராட்டமாக விரிவடையவே செய்யும்.

● குமார்





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 4**

**பிப்ரவரி 2006**

***உள்நாடு***
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

***வெளிநாடுகள்***
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

***படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்***

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# அடிமை + அடியாள் = வல்லரசு!

சூடு, சொரணை ஏதுமில்லாத அமெரிக்க அடிமைத்தனத்திற்கு இலக்கணம் படைத்து வருகிறது காங்கிரசு அரசு. மறுகாலனியாக்கக் கொள்கைகளை வெகு விசுவாசமாகவும் வெறித்தனமாகவும் மன்மோகன் சிங் அரசு அமல்படுத்தி வருவதனால் மட்டும் நாம் இவ்வாறு கூறவில்லை. இந்தியாவின் உள்நாட்டுக் கொள்கைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கைகளில் அப்பட்டமாகவும் ஆத்திரமூட்டும் வகையிலும் சென்ற மாதத்தில் மட்டும் பல தலையீடுகளை அமெரிக்க அரசு செய்துள்ளது. எனினும், காங்கிரசு அரசு சம்பிரதாய எதிர்ப்பு கூடக் காட்டாதது மட்டுமல்ல, அமெரிக்காவின் மனம் கோணாமலிருக்கும் பொருட்டு ஒரு புழுவைப் போல நெளிந்தும் வருகிறது.

''பிப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் கூட்டத்தில், இரானுக்கு எதிராக (மீண்டும்) வாக்களிக்காவிட்டால் அதன் விளைவுகள் மிக மோசமானதாக இருக்கும். இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை ரத்து செய்ய நேரிடும்... மேலும், தங்களது அணுசக்தி ஆராய்ச்சியில் எது சிவில் நோக்கத்திற்கானது, எது இராணுவ நோக்கத்திற்கானது என்பது குறித்து இந்திய அரசு எங்களுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை திருப்திகரமாக இல்லை. எங்களுடைய பரிட்சையில் இந்தியா தேறவில்லை'' என்று டிச. 25-ஆம் தேதியன்று பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்கிறார் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் முல்ஃபோர்டு. ''இது இந்தியாவின் இறையாண்மையில் தலையிடுவதாகுமென்றும், மிரட்டுவதாகுமென்றும் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டோர் கூச்சல் எழுப்பினர். 'தூதரின் கருத்துத்தான் எங்கள் அரசின் கருத்து' என்று தெனாவெட்டாக பதிலளித்தது அமெரிக்கா.

தூதர் விவகாரம் முடிவதற்குள் தனது அடுத்த ஆணையை அமெரிக்க அரசே நேரடியாக அறிவித்தது. ''இந்திய அரசின் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் சீன நிறுவனத்துடன் இணைந்து சிரியாவின் எண்ணெய் வயலில் முதலீடு செய்ய போட்டுள்ள திட்டத்தை இந்தியா உடனே ரத்து செய்யவேண்டும்'' என்று எழுத்துபூர்வமாக உத்தரவு பிறப்பித்தது. அடுத்த மூன்று நாட்களில் மீண்டும் முல்ஃபோர்டு பேசினார். இந்தியாவில் வங்கி, இன்சூரன்சு, சில்லறை வணிகம் ஆகியவற்றில் 100% பன்னாட்டு மூலதனம் இன்னமும் அனுமதிக்கப்படாததைச் சாடினார். காங்கிரசு அரசோ எதற்குமே மூச்சு விடவில்லை. மறுகாலனியாக்கம் என்பது பொருளாதார அடிமைத்தனம் மட்டுமல்ல என்பதற்கு இவை சான்றுகள்.

நாடாளுமன்றத்திற்கோ கூட்டணிக் கட்சிகளுக்கோ, தனது சொந்தக் கட்சியினருக்கோ கூடத் தெரியாமல், சென்ற ஆண்டு ஜூன் 28-ஆம் தேதி அமெரிக்காவில் பிரணாப் முகர்ஜி போட்ட பாதுகாப்பு ஒப்பந்தமும், அதன் பின் ஜூலை 18-ஆம் தேதி மன்மோகன் சிங் புஷ்ஷுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையும்தான் இந்த அமெரிக்க அடிமைத்தனத்திற்கான அடிப்படை ஆவணங்கள். அமெரிக்காவின் ஆணையை ஏற்று இரானிலிருந்து குழாய் மூலம் எரிவாயு பெறும் திட்டத்தை முடக்கியது, அதற்குப் பதிலாக அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் எனும் பெயரில் இந்தியாவின் அணுமின் நிலையங்கள், ஆயுதங்கள், ஆய்வுகள் அனைத்தையும் அமெரிக்காவின் சோதனைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்த ஒப்புக் கொண்டது, அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் அதன் காலாட்படையாக இந்திய இராணுவத்தை இறக்க ஒப்புக் கொண்டது, அமெரிக்க - இந்திய கூட்டு இராணுவப் பயிற்சி... என விரிகிறது இந்த ரகசிய ஒப்பந்தம். இந்தக் கணம் வரை இவ்வொப்பந்தத்தின் ஷரத்துகளை வெளியிட காங். அரசு மறுக்கிறது.

சீனாவுக்கு எதிரான இராணுவத்தளமாகவும் அடியாளாகவும் இந்தியாவைப் பயன்படுத்துவதுதான் அமெரிக்கா வகுத்திருக்கும் ஆசியாவுக்கான யுத்த தந்திரத் திட்டம். பேரழிவு ஆயுத அபாயம் என்று புளுகி இராக்கை ஆக்கிரமிப்பதற்கான முகாந்திரங்களை உருவாக்கியதைப் போலவே, இரான் மீது போர் தொடுக்கவும் திட்டமிட்டு வருகிறது அமெரிக்கா. இதற்குத் துணை நிற்கிறது மன்மோகன் சிங் அரசு. எனவேதான், அமெரிக்காவின் இந்த யுத்ததந்திரத் திட்டத்திற்கு இடையூறாக இரான், சிரியா, சீனா ஆகிய நாடுகளுடனான எண்ணெய் எரிவாயு ஒப்பந்தங்களை உருவாக்க முயன்ற மணிசங்கர் அய்யரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு அந்த இடத்தில் பிரபல அமெரிக்க கைக்கூலியும் மும்பை தரகு முதலாளிகளின் அபிமான புரோக்கருமான முரளி தியோராவை எண்ணெய் - எரிவாயு அமைச்சராக நியமித்திருக்கிறது. 'தேசிய நலன்' என்ற பெயரில் நாம் அமெரிக்க அடிமைகளாக்கப்படுகிறோம். வல்லரசாக்குவது என்ற பெயரில் நமது நாடு அமெரிக்காவின் அடியாளாக்கப்படுகிறது. அபாயகரமான இந்தத் தேசத்துரோகிகள் உடனே தூக்கியெறியப்படவில்லையானால் அமெரிக்காவின் போர்ச் சக்கரத்தில் சிக்கி நாடே சின்னாபின்னமாகி விடும். ●

www.padippakam.com

# உலக வங்கி உத்தரவு! உணவு மானியம் குறைப்பு!

# பரவும் பட்டினிச் சாவுகள்

குப்புறத் தள்ளிய குதிரை, குழியையும் பறித்த கதையாக, தனியார்மய - தாராளமயத்தால் கோடிக்கணக்கான மக்களை வறுமையில் தள்ளிவிட்டுள்ள காங்கிரசு ஆட்சியாளர்கள், இப்போது ரேஷனுக்காக ஒதுக்கப்படும் உணவு மானியத்தையும் குறைத்து நாட்டைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டுள்ளார்கள். கடந்த ஜனவரி 6-ஆம் தேதியன்று கூடிய பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம், ரேஷனுக்காக ஒதுக்கப்பட்ட மானியத்தை மேலும் குறைத்து பட்ஜெட்டுக்கு முன்னதாகவே ரூ.4524 கோடியை ஏழைகளிடமிருந்து வழிப்பறி செய்யக் கிளம்பியுள்ளது.

இதன்படி, அந்த்யோதயா அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் (வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களில் ஏழைகளிலும் ஏழைகளுக்கான மத்திய அரசின் உணவுத் திட்டத்தின் கீழ்) வழங்கப்பட்டுவரும் 35 கிலோ உணவு தானியம் 30 கிலோவாகக் குறைக்கப்படும். ரேஷன் மூலமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் உணவு தானியம் 35 கிலோவிலிருந்து 30 கிலோவாகக் குறைக்கப்படும். வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ள மக்களுக்கு வழங்கப்படும் உணவு தானியத்தின் அளவு 35 கிலோவிலிருந்து 20 கிலோவாகக் குறைக்கப்படும்.

இது மட்டுமின்றி, வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ள மக்களுக்கு மாநில அரசு ஒதுக்கீடு செய்யும் ரேஷன் அரசியின் விலையை கிலோவுக்கு 85 பைசா வீதமும் கோதுமையின் விலையை கிலோவுக்கு 95 பைசா வீதமும் உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதோடு, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கு ரேஷனில் வழங்கப்படும் உணவு தானியங்களின் விலையையும் உயர்த்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 8 கோடி குடும்பங்களும், வறுமைக் கோட்டுக்கு மேல் வாழும் 9.5 கோடி குடும்பங்களும் அந்த்யோதயா திட்டத்தின் கீழ் வரும் 2.5 கோடி குடும்பங்களும் மேலும் வறுமைக்கும் பட்டினிக்கும் தள்ளப்பட்டுள்ளன. ஒட்டு மொத்தமாக, நாட்டின் 80% மக்களின் வாழ்நிலை மேலும் மோசமடைந்து இருண்ட காலத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் மதிப்பீடுகளின்படி, ஓராண்டுக்கான நபர்வாரி தானிய நுகர்வு குறைந்தபட்சம் 157 கிலோவாக இருக்க வேண்டும். 1947-லிருந்து இன்றுவரை எந்தவொரு காலகட்டத்திலும் எந்தவொரு அரசும் ரேஷன் விநியோகத்தின் மூலம் இந்தத் தேவையை நிறைவு செய்ததில்லை. 1998-ஆம் ஆண்டில் நபர்வாரி தானிய நுகர்வு 145 கிலோவுக்கும் கீழே போனது. இப்போது அது மேலும் படுபாதாள நிலைக்குக் குறைந்துவிட்டது. பெரும்பான்மையான மக்கள் மிகக் குறைந்தபட்ச அளவு தானியத்தைக் கூட நுகர முடியாமல், காலனிய ஆட்சியில் நிலவிய வங்காளப் பஞ்சத்தின் கோரத்தைப் புதுப்பிப்பதாக நிலைமை உள்ளது என்று முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களே எச்சரிக்கின்றனர்.

ஒரே நேரத்தில் மொத்தமாக வாங்க வேண்டியிருப்பதால்,வறுமையின் காரணமாக 11 கோடி ஏழைக் குடும்பங்கள் ரேஷன் பொருட்களையே வாங்க முடிவதில்லை. நாட்டின் 50%-க்கும் மேற்பட்ட குழந்தைகள் போதிய உணவின்றி எலும்பும் தோலுமாக உள்ளன. 70%-க்கும் மேலான குழந்தைகள் புரதச் சத்து பற்றாக்குறையுடன் பிறந்து அடிக்கடி நோய் தாக்கி அவதிப்படுகின்றன. 60%-க்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களிடம் ரத்தசோகை நோய் பரவலாக உள்ளது. இவையெல்லாம் முந்தைய பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் நீடித்த அவலநிலைமை. இதுதவிர, தாராளமயத்தால் விவசாய நெருக்கடியும் வேலையின்மையும் நாடெங்கும் நீடித்தது.

வறுமையை ஒழித்து ஏழைகளுக்கு நல்வாழ்வு அளிக்கப் போவதாக வாக்குறுதி அளித்து காங்கிரசுக் கூட்டணி ஆட்சிக்கு வந்தது. ஆனாலும் வறுமை ஒழியவில்லை; வறியவர்கள்தான் ஒழித்துக் கட்டப்பட்டனர். ஆந்திராவிலும் ராசஸ்தானிலும் பட்டினிச் சாவுகள் தொடர்கின்றன. 2005 ஜனவரியிலிருந்து ஜூலைக்குள் பழங்குடியினப் பகுதிகளில் 2814

பட்டினிச் சாவுகள் நடந்த ஒரிசா - காசிபுர் பகுதியில், ஒருவேளை கஞ்சிக்காகத் தட்டைத் தூக்கிக் கொண்டு ஓடும் பழங்குடியினக் குழந்தைகள். (கோப்பு படம்)





படிப்பகம்

குழந்தைகள் பட்டினியால் மாண்டு போயுள்ளதாக மகாராஷ்டிரா அரசு அம்மாநில உயர்நீதி மன்றத்தில் ஒப்புக் கொண்டது.

சுற்றுச்சூழல் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மையத்தின் 2005-ஆம் ஆண்டின் ஆய்வின்படி, ராசஸ்தான் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களில் 99% தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர் கொடிய வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்கின்றனர். ஒருநாளைக்கு ஒருவேளை மட்டுமே உணவு உண்பவர்கள் 25%-க்கும் மேலாக உள்ளனர்.

ஒரிசாவின் ரயாகடா மாவட்டத்தில் பட்டினியால் பரிதவிக்கும் பழங்குடியின மக்கள் மாங் கொட்டைப் பருப்புகளை வேக வைத்து உண்கிறார்கள். ராசஸ்தானின் பாரன் மாவட்டத்தைச் சேர்ந்த சஹரியா பழங்குடியின மக்கள் சாமா என்னும் காட்டுப் புல் விதைகளை வேகவைத்து பசியாறுகிறார்கள். ஜார்கண்ட் மாநிலத்தின் பலாமு மாவட்டத்திலும், மத்தியப்பிரதேசத்தின் சிவபுரி மாவட்டத்திலும் பட்டினியால் தவிக்கும் மக்கள் காட்டுக் கீரைகளையும் கிழங்குகளையும் வேகவைத்து உண்டு குற்றுயிருடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் நீடித்த இந்த அவலம் காங்கிரசு ஆட்சியிலும் இன்னமும் தொடர்ந்து நீடிப்பதோடு, இன்னும் பல பகுதிகளுக்குப் பரவி வருகிறது.



மாட்டுக்குத் தீவனமாகப் போடப்படும் காட்டுப் புற்களைத்தான் தாங்கள் தின்று உயிர் வாழ்வதாகக் கூறுகிறார், ராசஸ்தானைச் சேர்ந்த சகாரியா பழங்குடியினப் பெண். (கோப்புப் படம்)

பெரும்பாலான நாடுகளில் இத்தகைய நிலைமை ஏற்பட்டால், தேசிய அவசரநிலை பிறப்பித்து போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் நடக்கும். ஆனால் காங்கிரசு கயவாளிகளின் ஆட்சியில் ரேஷனில் கொடுக்கப்படும் உணவு தானியத்தின் அளவு குறைக்கப்பட்டு, ரேஷன் பொருட்களின் விலையும் உயர்த்தப்பட்டு கோடிக்கணக்கான மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளும் சதி வேகமாக நடந்து வருகிறது.

சில நேரங்களில் உண்மைகள், கற்பனைக் கதைகளைவிட விநோதமாக இருக்கும் என்பார்கள். மாங்கொட்டை பருப்பையும், கிழங்குகளையும், புல்-பூண்டு - இலை தழைகளையும் தின்று உயிர்வாழும் நிலையிலுள்ள குடிமக்களைக் கொண்டுள்ள ஒரு நாடு, உணவு தானியங்களை ஏற்றுமதி செய்கிறது என்றால், அதை என்னவென்று சொல்வது? அந்தப் 'பெருமைக்குரிய' நாடு இந்தியாதான்! உணவு மற்றும் விவசாய அமைப்பின் கூற்றுப்படி, கடந்த ஐந்தாண்டுகளில் ஏறத்தாழ 1.5 கோடி பேர் புதிதாக பட்டினிப் பட்டாளத்தில் சேர்ந்துள்ள நிலையில், 2 கோடி டன் உணவு தானியங்களை ரேஷன் கடையைவிடக் குறைவான விலைக்கு ஏற்றுமதி செய்து 'சாதனை' படைத்துள்ள நாடும் இந்தியாதான்! இதுதான் பொருளாதார வளர்ச்சிக்கான பாதை, வல்லரசாக வளர்வதற்கான பாதை என்று முதுகில் தட்டிக் கொடுக்கும் உலக வங்கி, இந்தப் பாதையில் முன்னேற வேண்டுமானால், உணவு உற்பத்தியைக் குறைக்க வேண்டும்; ரேஷன் கடைகளை மூட வேண்டும் என்று உத்தரவு போடுகிறது.

இந்திய விவசாயத்தின் 'வளர்ச்சிக்கு' பல வழிகளில் 'உதவி' செய்து வரும் உலக வங்கிதான் இப்போது உணவு உற்பத்தியை நிறுத்தச் சொல்கிறது; உணவு மானியத்தை நிறுத்தி ரேஷன் கடைகளை மூடச் சொல்கிறது. ஏனெனில், ஏகாதிபத்திய நாடுகளில் ஏராளமான உணவு தானியங்கள் தேங்கிக் கிடக்கின்றன. இந்த நிலைமையில் இந்தியா எதற்கு உற்பத்தி செய்ய வேண்டும்; அப்படித் தேவைப்பட்டால் அமெரிக்காவிடம் இறக்குமதி செய்து கொள்ளலாம் என்கிறது உலக வங்கி.

ஒரு கிலோ அரிசி அல்லது கோதுமையின் உற்பத்திச் செலவு அமெரிக்காவை விட இந்தியாவில் அதிகமாக இருக்கிறது. அதுமட்டுமின்றி அவை மிகவும் மலிவாக இந்தியாவில் விற்பனையாகின்றன. இந்த இழப்பை ஈடுகட்டுவதற்கு அரசு மானியங்கள் வேறு கொடுக்கப்படுகின்றன. ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய தொழில்களுக்கு மானியம் கொடுத்தால் அது 'வளர்ச்சி'க்கு உதவும்; விவசாயத்திற்குப் போய் அள்ளித் தருவதா என்று பொருமுகிறது உலக வங்கி.

ஏழை நாடுகளின் உணவுச் சந்தையைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செலுத்த ஏகாதிபத்திய நாடுகளின் உணவு வர்த்தகக் கழகங்கள் நீண்டகாலமாக முயற்சித்து வருகின்றன. நுகர்பொருட்களை ஏழை நாடுகளில் கொண்டு வந்து கொட்டி பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகள் ஆதிக்கம் செய்வதைப் போலவே, உணவு தானியங்களையும் ஏழைநாடுகளில் இறக்குமதி செய்து ஆதிக்கம் செய்வதில் அவை குறியாக இருக்கின்றன.

இந்தியா போன்ற சில ஏழை நாடுகளில் அரசாங்கம் உணவு தானியக் கொள்முதல் செய்வதும், ரேசன் விநியோக முறையும் நீண்ட காலமாக இருந்து வந்தது. அரசாங்கம் கணிசமான அளவுக்கு உணவு தானியங்களைக் கையிருப்பில் வைத்திருந்ததும், விலை உயர்வு கடுமையாக இருக்கும் காலங்களில் அரசாங்கக் கிடங்குகளிலிருந்து ஒரு பகுதியை சந்தையில் இறக்கியதும், விவசாய உற்பத்திக்கும் வர்த்தகச் சூதாட்டத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்துவதற்கும் உதவுவதாக இருந்தன. இத்தகைய நடைமுறையானது, பன்னாட்டு ஏகபோக உணவு வர்த்தகக் கம்பெனிகளின் இலாப வேட்டைக்கு ஒரு தடைக்கல்லாக இருந்தது. எனவேதான், இந்தியா போன்ற பெரிய ஏழை நாடுகளின் உணவு உற்பத்தியை நிர்ப்பந்தமாகக் குறைக்கச் செய்யவும், உணவுப் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒழித்துக் கட்டவும் ஏகாதிபத்தியங்கள் ஏராளமான சதிகளைச் செய்து வருகின்றன.



இந்தியாவிலேயே தொழில்துறையில் மிகவும் முன்னேறியதாகக் கூறப்படும் மகாராஷ்டிரா மாநிலத்தில், போதிய ஊட்டச்சத்து உணவு கிடைக்காததால், உயிருக்குப் போராடும் பழங்குடியினக் குழந்தைகள். (கோப்புப் படம்)

உள்நாட்டு சோடா கம்பெனிகளை ஒழித்தால்தான் கோகோ கோலா ஆதிக்கம் செலுத்த முடியும். அதே போல, உள்நாட்டு விவசாய உற்பத்தியையும் உணவுப் பாதுகாப்பையும் ஒழித்தால்தான், பன்னாட்டு உணவு வர்த்தகக் கழகங்கள் ஆதிக்கம் செலுத்த முடியும்; ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்ய வைத்து கொள்ளை இலாபத்தைச் சுருட்ட முடியும்.

இந்த நோக்கத்தோடுதான் இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மீதும், ரேஷன் விநியோக முறையின் மீதும் உலக வங்கி தாக்குதலை நடத்தியது. உலக வங்கியின் கட்டளைப்படி, 1991-92 -இல் ரேஷன் கோதுமையின் விலை ஒரு கிலோவுக்கு ரூ. 2.34-லிருந்து ரூ. 4.02-க்கு உயர்த்தப்பட்டது. அரிசியின் விலை ரூ. 2.89-லிருந்து ரூ. 5.37-க்கு உயர்த்தப்பட்டது. இந்தத் தாக்குதல் போதாதென்று 1997 - 2000-வது ஆண்டுகளில் இன்னுமொரு கொடிய தாக்குதல் ஏவிவிடப்பட்டது. முதலாவதாக ரேஷன் விநியோகத் திட்டத்தின் கீழுள்ள மக்கள், ''வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்கள்'' என்றும், ''வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள்'' என்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டனர். அடுத்ததாக, வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கான ரேஷன் பொருட்களின் விலையும் உயர்த்தப்பட்டன.

ஏழைகள், தாங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பதை நிரூபித்து அதிகாரிகளிடம் அத்தாட்சி பெற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். இதன் மூலம் கோடிக்கணக்கான ஏழைகள் ரேஷன் விநியோகத் திட்டத்திலிருந்து விரட்டப்பட்டனர். சொந்த வீடு வைத்திருந்தாலோ, டி.வி. பெட்டி, மோட்டார் சைக்கிள் வைத்திருந்தாலோ அத்தகைய குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவையாகச் சித்தரிக்கப்பட்டன. இந்தியாவின் மிகப் பெரிய சேரிப் பகுதியான 5 லட்சம் ஏழைகளைக் கொண்ட மும்பையிலுள்ள தாராவியில் வெறும் 365 குடும்பங்களுக்கு மட்டுமே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என ரேஷன் அட்டை தரப்பட்டது. 1990-ஆம் ஆண்டில் மறு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, 151 குடும்பங்கள்தான் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளதாக பின்னர் குறைக்கப்பட்டது. இப்படி பல மாநில அரசுகள் வெவ்வேறு உத்திகளுடன் கோடிக்கணக்கான ஏழைகளை ரேஷன் விநியோகத் திட்டத்திலிருந்து விரட்டியடித்தன.

இது ஒருபுறமிருக்க, வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ள மக்களுக்கான ரேஷன் தானியங்களின் விலைகளை மைய அரசு இரு மடங்காக உயர்த்தியது. இவ்வாறாக, 2000-மாவது ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கான மானியங்கள் அறவே ஒழிக்கப்பட்டன. அடுத்த கட்டமாக, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கான ரேஷன் பொருட்களின் விலையும் உயர்த்தப்பட்டன. இதனால், பல வண்ணங்களில் தரப்படும் ரேஷன் அட்டை வெறும் அடையாள அட்டை என்பதற்கு மேல் வேறெந்தப் பயன்பாடும் இல்லாமல் போய் விட்டது.

இத்தனையும் போதாதென்று இப்போது இன்னுமொரு கொடிய தாக்குதலை உலக வங்கி கைக்கூலிகள் ஏவிவிட எத்தணித்துள்ளனர். கூட்டணிக் கட்சிகள் முணுமுணுக்கத் தொடங்கியதும் இந்த முடிவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய உணவு அமைச்சர் அறிவித்துள்ளார். ''நிறுத்தி வைப்பது என்றால் அந்த முடிவின் செயலாக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றே பொருள். இந்த முடிவு திரும்பப் பெறப்பட்டதாகவோ, அல்லது ரத்து செய்யப்பட்டதாகவோ மத்திய அரசு அறிவிக்கவில்லை'' என்று பாசிச ஜெயாவே பகிரங்கமாக காங்கிரசு அரசின் நயவஞ்சகத்தை அம்பலப்படுத்துகிறார்.

சட்டமன்றத் தேர்தலைக் குறிவைத்து, ''தமிழக ஏழைகளின் நலன் கருதி ரேஷனில் விநியோகிக்கும் உணவுப் பொருட்களின் விலை உயராது'' என்று அறிவிக்கிறார் ஜெயலலிதா. ஜெயாவின் சவடாலும் மைய அரசின் தற்காலிக நிறுத்தி வைப்பும் வரும் சட்டமன்றத் தேர்தலுடன் காலாவதியாகி விடும். தேர்தலுக்குப் பின் யார் ஆட்சிக்கு வந்தாலும் உலக வங்கி உத்தரவுப்படியும் மைய அரசின் முடிவின்படியும் ரேஷன் கடைகளை ஒழித்துக் கட்டும் வேலை வேகமாக நடந்தேறும்.

எல்லா ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் நாட்டை மீண்டும் காலனியாக்கி கோடிக்கணக்கான மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளும் இச்சதிக்கு உடந்தையாகவே நிற்கின்றன. ''உணவு மானியத்தைக் குறைக்காதே!'' என்று வீரவசனம் பேசும் போலி கம்யூனிஸ்டுகள், வெட்கமின்றி காங்கிரசு கூட்டணி அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உலகமயத்தை எதிர்ப்பதாக நாடகமாடிக் கொண்டே, விவசாயத்தில் அந்நிய நேரடி முதலீட்டை வரவேற்று ஆதரிக்கிறார்கள்.

நாட்டின் மீதும் மக்களின் மீதும் ஒரு போர் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இது ஏகாதிபத்தியங்களின் காலனியாதிக்கப் போர். போரை போரால்தான் முறியடிக்க முடியும். ஓட்டுக்கட்சிகளைப் புறக்கணித்து புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் பஞ்சைப் பராரிகள் திரண்டு, போர் தொடுக்காவிடில் இக்காலனியாதிக்கத்தை வீழ்த்த முடியாது; இந்தியா, இன்னுமொரு எத்தியோப்பியாவாக, சோமாலியாவாக மாறுவதைத் தடுக்கவும் முடியாது.

● மனோகரன்

www.padippakam.com

# தாமிரவருணி எங்கள் ஆறு! அமெரிக்க 'கோக்'கே வெளியேறு!

"தாமிரவருணியை உறிஞ்ச வரும் அமெரிக்க கோக்கை அடித்து விரட்டுவோம்!" - என்ற முழக்கத்தின் கீழ் நெல்லை கங்கை கொண்டானில் நாங்கள் நடத்திய போராட்டம் ஒரு மக்கள் போராட்டமாக உருவெடுத்து வருகிறது. இயற்கை வளமான தண்ணீரை, உயிரின் ஆதாரமான தண்ணீரை விற்பனைச் சரக்காகவும் பன்னாட்டு முதலாளிகளின் தனியுடைமையாகவும் மாற்றும் மறுகாலனியாக்கக் கொள்கையின் கொடிய முகத்தை அம்பலப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ்வியக்கத்தின் குறியிலக்காக, கோக் என்னும் அமெரிக்க மேலாதிக்கத்தின் சின்னத்தைத் தெரிவு செய்தோம்.

இவ்வியக்கம் தமிழகமெங்கும் மக்களின் ஆதரவைப் பெற்றது மட்டுமல்ல, நெல்லை மற்றும் கங்கைகொண்டான் சுற்று வட்டாரத்து மக்கள் மத்தியில் ஒரு புதிய எழுச்சியையும் தோற்றுவித்திருக்கிறது. மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து அக்டோபர், நவம்பர் மாதங்களில் அப்பகுதி முழுவதும் கிராமம் கிராமமாகப் பிரச்சாரம் செய்யச் சென்ற எமது தோழர்களுக்கு உணவும் இடமும் கொடுத்து ஆதரித்ததுடன், சுற்று வட்டார கிராம மக்கள் 10,000 பேர் "கோக் ஆலையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்" என்ற மனுவில் தமது பெயர், முகவரியுடன் கையெழுத்திட்டுத் தந்தார்கள். "தாமிரவருணி எங்கள் ஆறு, அமெரிக்க கோக்கே வெளியேறு!" என்ற முழக்கத்தை மக்கள் முழக்கமாக மாற்றியது, இந்தப் பிரச்சார இயக்கம்.

மறுகாலனியாக்கத்திற்கு எதிரான எமது போராட்டத்திற்கு மக்கள் வழங்கிய ஆதரவிற்கு இது சான்று; கோக் அடிமைத்தனத்திற்கோ நெல்லை போலீசின் நடவடிக்கைகள் சான்று கூறின. முதலில் ஒரு சில கூட்டங்களுக்கு அனுமதி அளித்து, பேச்சாளர் மீது ராஜத்துரோக வழக்குப் பதிவு செய்வதற்கு அவற்றை முகாந்திரமாக்கிக் கொண்டபின், அக்.-நவ. மாதங்களில் எமது எல்லாக் கூட்டங்களுக்கும் தடை விதித்தது, போலீசு. வழக்கமாக, "சட்டம் ஒழுங்கு, பொது அமைதி" என்ற சொற்களில் ஒளிந்து கொண்டு பேச்சுரிமையை மறுக்கும் போலீசு அதிகாரிகள், இந்த முறை தமது கோக் விசுவாசத்தைக் கடிதமாகவே எழுதிக் கொடுத்தனர்.

"நீங்கள் பிரச்சாரத்திற்கு அனுமதி கோரியுள்ள கிராமங்கள் பெரும்பாலானவற்றில் உள்ள மக்கள் மேற்படி கம்பெனிக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அவ்வாறான கிராமங்களில் இது போன்ற பிரச்சாரங்கள் வன்முறையைத் தூண்டும் விதமாக அமைய வாய்ப்புகள் நிறைய உள்ளன." "திருநெல்வேலியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் போயிருக்கிறது. நீங்களும் தேர்தலைப் புறக்கணிப்பவர்கள். உங்கள் பிரச்சாரம் சாதிக் கலவரத்தைத் தூண்ட வாய்ப்பு உள்ளது", "முதலில் சட்டப்படி பிரச்சாரம் செய்வது, பிறகு சட்ட விரோதமான முறைகளில் ஈடுபடுவது என்பது உங்கள் வழிமுறை" எனப் பொய்யும் புனைசுருட்டும் அடங்கிய ஒரு நீண்ட 'குற்றப் பத்திரிக்கையை'யே தனது அனுமதி மறுப்புக் கடிதமாக எழுதிக் கொடுத்தது, நெல்லை போலீசு.

எம் மீதான அடக்குமுறைகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதற்காக இவற்றைக் கூறவில்லை. கங்கைகொண்டான் சுற்றுவட்டாரத்தில் கோக் எதிர்ப்புப் பிரச்சாரம் எங்கே நடந்தாலும், அடுத்த அரை மணி நேரத்தில் அங்கே வந்திறங்குகிறது "கியூ" பிரிவு போலீசு. ஆயுத போலீசுப் படையோ களத்தில் இறங்கத் தயாராக நிற்கிறது. கோக் ஆலைக்கெதிராக ஊர் மறியல் அறிவித்த நாட்டாமைகள் மிரட்டப்படுகிறார்கள். கிராம சபைக் கூட்டம் மாவட்ட ஆட்சியரால் முடக்கப்படுகிறது. கேவலம் ஒரு சோடா கலர் கம்பெனிக்கு கங்காணி வேலை பார்க்கிறார் மாவட்ட கலெக்டர். வாட்சுமேன் வேலை பார்க்கிறது போலீசு. கோக் சார்பில் மக்களை வேவு பார்க்கிறது உளவுத்துறை.

இது வெறும் தண்ணீர் பிரச்சினை என்றோ, நெல்லை மாவட்ட மக்களின் உள்ளூர் பிரச்சினை என்றோ இன்னமும் யாராவது கருதிக் கொண்டிருந்தால், அவர்களுக்குத் தனது நடவடிக்கைகள் மூலம் 'அரசியல் தெளிவு' ஏற்படுத்தி வருகிறது அரசு. தாமிரவருணி ஆறும் கங்கைகொண்டானின் நிலத்தடி நீரும் தனக்கு வேண்டுமென ஒரு அமெரிக்க கம்பெனி கேட்டால், அவற்றை மறுபேச்சில்லாமல் கொடுத்து விடவேண்டுமாம். கங்கைகொண்டான் அருகிலேயே உள்ள மானூர் ஏரி தூர்ந்து கிடக்கிறது; பாசனத்திற்குத் தண்ணீரில்லை; ஒரு குடம் குடிநீர் 2 ரூபாய் விற்கிறது. இந்நிலையில் குளிர்பானக் கம்பெனிக்கு ஆற்று நீரைத் தாரை வார்ப்பது மட்டுமல்ல, அதை எதிர்த்துக் கேள்வி கேட்கக் கூட அப்பகுதி மக்களுக்கு உரிமை கிடையாது என்கிறது அரசு. தான் ஒரு ஏகாதிபத்தியக் கைக்கூலி என்பதைத் தானே முன்வந்து நிரூபித்துக் கொண்டிருக்கிறது. அன்று கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர்களும், கவர்னர் ஜெனரல்களும், ஆங்கிலேயப் போலீசு அதிகாரிகளும் அமர்ந்திருந்த இடத்தில், இன்று பிரதமரும், முதல்வரும், மாவட்ட ஆட்சியரும், போலீசு அதிகாரிகளும் அமர்ந்திருக்கிறார்கள்.

நெல்லையில் என்ன நடக்கிறதோ

நெல்லை – தாழையூத்தில் 'கோக்'கிற்கு எதிராக சுவரெழுத்து எழுதியதற்காக (படம்), இரண்டு தோழர்களைக் கைது செய்து, 'கோக்'கின் அடியாளாகச் செயல்படுகிறது, நெல்லை போலீசு.





படிப்பகம்

அதுதான் நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது. சுனாமியால் அகற்றப்பட்ட சென்னை மீனவர்களிடமிருந்து கடற்கரையைப் பறித்துக் கொண்ட அரசு, அவர்களை துரைப்பாக்கத்தின் பன்றித் தொழுவங்களில் குடி வைத்தது. அங்கே குடிநீர் இல்லையென மகாபலிபுரம் சாலையை அவர்கள் மறித்தவுடன் இரக்கமேயில்லாமல் அம்மீனவ மக்களின் மண்டையை உடைத்தது - காரணம், பன்னாட்டு தகவல் தொழில் நுட்பக் கம்பெனிகளுக்கு அவர்களால் தொந்தரவாம்! தரகு முதலாளிகள் கனிவளங்களைக் கொள்ளையிடுவதற்காகத் தங்களது கிராமங்களைக் காலி செய்ய மறுத்த கலிங்கா நகர் பழங்குடி மக்கள் ஒரிசா போலீசால் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். ஜப்பானிய அதிகாரிகளால் அவமானப்படுத்தப்படுவதை எதிர்த்து ஊர்வலம் போன ஹோண்டா தொழிலாளர்களை ரத்தம் சொட்டச் சொட்ட அடித்து நொறுக்கியது அரியானா போலீசு.

பன்னாட்டு நிறுவனங்கள் 'எள்' என்றால் எண்ணெயாக நிற்கிறது மன்மோகன் சிங் அரசு. விவசாயம், சில்லறை வணிகம் எனப் பெரும்பான்மை மக்களுக்கு வாழ்வளித்த எல்லாத் தொழில்களும் தொழில் துறைகளும் வங்கிகளும் பன்னாட்டு நிறுவனங்களின் சொத்தாக மாற்றப்படுகின்றன. ''ஈரானிடமிருந்து எண்ணெய் வாங்காதே, சிரியாவுடன் ஒப்பந்தம் போடாதே'' என அமெரிக்கா போடும் உத்தரவுகள் அனைத்தையும் ஏற்று புஷ்ஷின் காலை நக்குகிறது காங்கிரசு அரசு.

இது மறுகாலனியாதிக்கம் என்று நிரூபிப்பதற்கு மேலும் சான்றுகள் தேவையில்லை. கோக் எதிர்ப்புப் போராட்டத்தின் எல்லை, நெல்லை மாவட்டம் மட்டுமில்லை. எனவேதான் மார்ச் 23 பகத்சிங் நினைவு நாளன்று தமிழகமெங்கும் ''கோக் மற்றும் பன்னாட்டுப் பொருட்கள் எரிப்புப் போராட்டம்'' நடத்துவதென அறிவித்திருக்கிறோம். கும்பினியாட்சியும் காலனியாதிக்கமும் திரும்பும்போது அவற்றுக்கெதிரான விடுதலைப் போராட்டமும் மீண்டும் உயிர்த்தெழுந்தே தீரும். ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வும் நாட்டுப்பற்றும் கொண்ட ஜனநாயக சக்திகள் அனைவரையும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

**- போராட்டக் குழு,**
**ம.க.இ.க; வி.வி.மு;**
**பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு.**

# கொலைகார 'கோக்'கின் பணபலம் - அதிகாரத் திமிருக்கு விழுந்த அடி

**கொ**க்கோ கோலா நிறுவனத்தின் ஆணவத்திற்கு முதலடி விழுந்திருக்கிறது. ஜனவரி 26-ஆம் தேதி நடைபெற்ற கங்கைகொண்டான் கிராமசபைக் கூட்டத்தில் ''கோக் ஆலையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்'' என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியுள்ளது. 9 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6,500 வாக்காளர்களைக் கொண்டது இந்தக் கிராமசபை. எமது செப்.12 மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து, அக்.2 காந்தி ஜெயந்தியன்று நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் பெரும்பான்மை மக்கள் கோக் ஆலையை எதிர்த்ததால், தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் அன்று கிராம சபை, மாவட்ட நிர்வாகத்தால் கலைக்கப்பட்டது. ''அதிகமான மக்கள் கூடினால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும்'' என்ற கேலிக்கூத்தான காரணத்தைக் கூறி நவம்பர் மாதம் நடைபெற விருந்த கூட்டத்தை ரத்து செய்தார், ஆட்சியர்.

இந்தக் 'குடியரசு' தினத்தன்று நடைபெற வேண்டிய கூட்டத்தை ரத்து செய்ய மாவட்ட நிர்வாகத்தால் வேறெந்தக் காரணமும் கண்டுபிடிக்க முடியவில்லை. ''குடியரசு தினத்தன்று மக்களாட்சியின் மாண்பை நிரூபிக்க கூட்டத்தை நடத்த வேண்டும். அதேநேரத்தில் மக்கள் யாரையும் வரவிடாமல் செய்வதன் மூலம் கோக் எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற விடாமல் தடுக்கவும் வேண்டும்'' - என்ற இரண்டு அம்சத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு போலீசிடம் ஒப்படைக்கப்பட்டது. ''கிராமசபைக் கூட்டத்தில் பெரிய கலவரம் நடக்கும், எனவே யாரும் வராதீர்கள்'' என்று ஊர் ஊராகப் பிரச்சாரம் செய்தது, போலீசு.

போலீசின் கோக் எடுபிடித்தனத்தை அம்பலப்படுத்தி ''எல்லோரும் கிராமசபைக் கூட்டத்திற்குச் செல்லுங்கள்'' என்று கிராமம் கிராமமாகப் பிரசுரம் விநியோகித்தார்கள் எங்களது தோழர்கள். கூட்டத்திற்கு வந்த மக்களை மிரட்ட நூற்றுக்கணக்கில் போலீசு குவிக்கப்பட்டிருந்தது. கூட்டம் தொடங்கியவுடன் கோக் எதிர்ப்புத் தீர்மானம் முன்மொழியப்பட்டது. நடலிங்கம் (அ.தி.மு.க.), கருப்பையா (தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ) ஆகியோர் தலைமையிலான சிறு கும்பல் உடனே ஆத்திரம் அடைந்தது. குறைந்தபட்ச எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் (கோரம்) இல்லையென்பதால் தீர்மானம் நிறைவேற்றக் கூடாது எனக் கூச்சலிட்டது. ''உங்கள் ஆட்களைப் பெருமளவில் திரட்டி வந்து கோக் ஆதரவு தீர்மானம் போட வேண்டியது தானே'' என்று அந்த எடுபிடிகளுக்கு நக்கலாகப் பதிலடி கொடுத்தனர் மக்கள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ''எல்லோரும் கலைந்து செல்லுங்கள்'' என்று மக்களை விரட்டத் தொடங்கியது போலீசு. மக்கள் முழக்கமிடத் தொடங்கினார்கள். செப். 12-ஆம் தேதியன்று நெல்லை ஜவகர் திடலில் நாங்கள் எழுப்பிய ''அமெரிக்க கோக்கே வெளியேறு!'' என்ற அந்த முழக்கம் ஜன.26 அன்று கங்கைகொண்டானில் எதிரொலித்தது. அவமானமும் ஆத்திரமும் அடைந்த கோக்கின் கைக்கூலிகள் அங்கிருந்து தப்பி வெளியேறினர். இரண்டு நாட்களுக்கு முன் இதே முழக்கத்தை சுவரில் எழுதியதற்காக எமது தோழர்கள் இருவரை சிறையில் அடைத்த போலீசு, அதே முழக்கம் நூற்றுக்கணக்கான மக்களின் குரலாகத் தம் கண் முன்னே வெடித்து வருவதைக் கண்டு செய்வதறியாமல் திகைத்தது. கோக் ஆலையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டுமென்ற தீர்மானம் கிராமசபையால் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு சட்டரீதியான தகுதி எதுவும் கிடையாது என்பது உண்மைதான். ஆனால், அப்பகுதி மக்கள் ஆலையை எதிர்க்கிறார்கள் என்ற உண்மை, தன்னால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பின் வழியாகவே வெளிவந்துவிடக் கூடாது என்பதற்காக அரசு எந்திரம் செய்த தந்திரங்கள் எல்லாம் அன்று தவிடுபொடியானது. அந்த வகையில் இது கோக்கின் அதிகாரத் திமிர் மீது விழுந்த ஒரு அருமையான அடி.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாவது அடி 27-ஆம் தேதியே விழுந்தது. கோக்கை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றி, அடுத்த சில நாட்களிலேயே மர்மமான முறையில் மரணமடைந்த கங்கை கொண்டான் பஞ்சாயத்துத் தலைவர் கம்சனின் மரணம் குறித்து சி.பி.சி.ஐ.டி விசாரணை நடத்த வேண்டும் என மதுரை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டிருக்கிறது.




கங்கைகொண்டானில் நடந்த கிராமசபைக் கூட்டத்தில் போலீசின் அச்சுறுத்தலையும் மீறி 'கோக்' கிற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கைநாட்டு வைக்கும் மூதாட்டி.

ஆகஸ்டு 23-ஆம் தேதியன்று கோக் எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றிய கம்சன் ஆக.29-ஆம் தேதி இறந்தார். மறுநாளே சன் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ''இந்த மரணத்தில் கோக்கிற்கு தொடர்பு இருக்கிறது'' என்று குற்றம் சாட்டி நாங்கள் நீதி விசாரணை கோரினோம். நெல்லை முழுவதும் பிரச்சாரம் செய்தோம். உடனே, ''ம.க.இ.க.வினரால் எங்கள் உயிருக்கு ஆபத்து'' என்று புகார் கொடுத்தார்கள் கோக் அதிகாரிகள். கம்சன் மரணத்தை விசாரிக்காத போலீசு எங்களை விசாரித்தது. மனித உரிமைப் பாதுகாப்பு மையம் **(HRPC)** கொடுத்த புகாரையோ, அவர்களது உண்மை அறியும் குழு அளித்த அறிக்கையையோ மாவட்ட போலீசு பொருட்படுத்தவில்லை. போலீசு மற்றும் கோக்கின் மிரட்டலுக்கு அஞ்சாமல் நடந்த உண்மைகளைப் புகாராகத் தருமாறு கம்சன் குடும்பத்தினருக்கு தைரியமூட்டினர் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள். ''தனது கணவனின் மரணத்திற்கு கோக் அதிகாரிகளான லட்சுமிபதி, கண்ணன் ஆகியோரே பொறுப்பு'' என்று குற்றம் சாட்டி கம்சனின் மனைவி சந்தனமாரி புகார் கொடுத்தார். அதன் மீதும் போலீசு நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்பின் ம.உ.பா. மையத்தின் முயற்சியில் மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கம்சனுடைய மனைவியின் சார்பில் வழக்குரைஞர் லஜபதிராய் வாதாடினார். நீதிமன்றத்தில் கோக் அதிகாரிகளுடன் போலீசு அதிகாரிகள் தோளோடு தோள் நின்றனர். புகாரைப் பதிவு செய்யாததற்கு எவ்விதக் காரணமும் கூற முடியாத போலீசு, கடந்த 5 ஆண்டுகளாக கம்சன் மேற்கொண்ட மருத்துவம் குறித்த ஆவணங்களையெல்லாம் திரட்டி வந்து நீதி மன்றத்தில் காட்டியது. ''வழக்கே பதிவு செய்யாமல் இவ்வளவு ஆவணங்களைத் திரட்டியிருக்கிறீர்களே, இதில் உங்களுக்கு என்ன அவ்வளவு விசேட அக்கறை?'' என்று கேள்வி எழுப்பினார் நீதிபதி. ''நெல்லை போலீசு கோக்கின் எடுபிடியாகச் செயல்படுவதால் இவ்வழக்கை அவர்கள் விசாரிக்கக் கூடாது'' என்ற கோரிக்கை ஏற்கப்பட்டு சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை. சட்டம் அவர்களைத் தண்டித்து விடும் என்ற மாயைக்கும் இடமில்லை. தமது கொலைக் குற்றங்களுக்காக ''கில்லர் கோக்'' என்று உலகப் புகழ் பெற்ற கொலைக் குற்றவாளிகள், தமது பணபலம் மற்றும் அதிகார பலத்தினால் கம்சனின் மரணம் குறித்த விசாரணையே நடைபெறாமல் தடுத்து, அவரது பிணத்தைக் குழி தோண்டிப் புதைத்து விடலாம் என்று இறுமாந்திருந்தார்களே, அந்த இறுமாப்புக் குத்தான் இந்தத் தீர்ப்பு ஒரு செருப்படி.

கங்கை கொண்டானில் நடந்த கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களை மிரட்டுவதற்காகக் குவிக்கப்பட்ட போலீசு பட்டாளம்.



அடுத்த அடியை எதிர் பார்த்து எதிரி காத்திருக்கட்டும். இறுதி அடியை வழங்க நெல்லை மக்கள் கிளர்ந்தெழட்டும்!

-போராட்டக் குழு,<br>ம.க.இ.க;<br>வி.வி.மு;<br>பு.ஜ.தொ.மு;<br>பு.மா.இ.மு.



படிப்பகம்

www.padippakam.com

## வெள்ளி விழா ஆண்டில் பா.ஜ.க.:

# ஒழுக்கக் கேடே ஆர்.எஸ்.எஸ். பாசிஸ்டுகளின் ஒழுக்கம்!

1980-இல் பாரதிய ஜனசங்கத்தின் தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்ட பாரதிய ஜனதா கட்சிக்கு, இது வெள்ளி விழா ஆண்டு. மும்பையில் நடந்த வெள்ளிவிழா மாநாட்டில் உரையாற்றிய அத்வானி, ''கடந்த 25 ஆண்டு கால அனுபவம் மகிழ்ச்சியாகவும், கட்சி உறுப்பினர் அனைவரும் பெருமை கொள்ளும் வகையிலும் இருந்தது. ஆனால் கடந்த 25 வாரங்களில் இலஞ்சம், ஊழல், உட்கட்சி பிரச்சினைகள், மற்றும் தேர்தல் பின்னடைவுகளால் இப்போது துயர்மிகு நாட்களை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்,'' என்று சோககீதம் பாடினார். இந்த கீதத்தில் தலைவர் பதவியை வேறு வழியின்றி ராஜினாமா செய்தது குறித்து அவர் வெளிப்படையாக பேசவில்லை என்றாலும், சோகத்தின் உள்ளுறையில் மறைந்திருக்கும் அந்த வருத்தத்தை யாரும் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்தத் துயர்மிகு நாட்களின் ஏனைய அத்தியாயங்கள் வாசகர்கள் ஏற்கெனவே அறிந்ததுதான். உமா பாரதி வெளியேற்றம், பா.ஜ.க. பொதுச்செயலர் சஞ்சய் ஜோஷியின் பாலுறவு சி.டி., உ.பி. சட்டசபை உறுப்பினர் கிருஷ்ணநந்த் ராய் உள்ளூர் மாஃபியா மோதலில் கொலை செய்யப்பட்டது, திருவனந்தபுரம் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் டெபாசிட் கூடக் கிடைக்காமல் பெருந்தோல்வியடைந்தது, நாடாளுமன்ற கேள்வி-பதில் நிகழ்ச்சிக்காக இலஞ்சம் வாங்கிய ஆறு பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டது, நாடாளுமன்ற உள்ளூர் நல மேம்பாட்டு நிதியில் கமிசன் பெற்று வீடியோவில் அம்பலமான மூன்று பா.ஜ.க. உறுப்பினர்கள், இறுதியாக பா.ஜ.க.வின் மராட்டிய பங்காளியான சிவசேனையில் ரானே, சஞ்சய் நிருபம் ஆகியோர் விலகலுக்குப் பிறகு தாக்கரேவின் மருமகனான ராஜ் தாக்கரே சிவசேனையை விட்டு வெளியேறியது... இவையெல்லாம் பா.ஜ.க. வின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் மின்னிய சோக முத்துக்கள்.

கண்ணைப் பறிக்கும் இந்த முத்துக்களின் ஒளிவீச்சால் பாதிப்படைந்த பா.ஜ.க.வின் அன்பான நடுத்தர வர்க்கம் சற்றே அதிர்ச்சியடைந்திருக்கிறது என்றால் அது மிகையான ஒன்றல்ல. இவர்கள், ஹிந்துவுக்கும், இந்தியா டுடேவுக்கும், துக்ளக்கிற்கும் எழுதி வரும் வாசகர் கடிதங்களில் தத்தமது புலம்பல் பல்லவியைப் பாடி வருகின்றனர். ''வித்தியாசமான கட்சி என்று பெயரெடுத்த பா.ஜ.க. இன்று பத்தோடு பதினொன்றாக மாறிவிட்டது, காங்கிரசு கலாச்சாரம் பா.ஜ.க.விலும் ஊடுருவி விட்டது, ஆர்.எஸ்.எஸ்.-இன் தேசபக்தி - கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கப் பயிற்சியால் உருவான தலைவர்கள் இன்று சீரழிந்து போனார்கள், அதிகாரத்தில் இல்லாத வரை நல்ல கட்சியாக இருந்த பா.ஜ.க., அதிகாரத்தில் அமர்ந்து அதை இழந்ததும் மோசடியாகி விட்டது'' என்றெல்லாம் அந்த வாசகர் கடிதங்கள் வருத்தப்படுகின்றன. பா.ஜ.க.வின் சிண்டை எப்போதும் கையில் வைத்திருக்க விரும்பும் ஆர்.எஸ்.எஸ்.-சும் கூட இதே தொனியில் பா.ஜ.க.வை எச்சரிக்கை செய்கிறது.

இப்படி பார்ப்பனப் பத்திரிக்கைகளும், பா.ஜ.க. ஆதரவாளர்களும்,

இரகசிய கள்ள உறவு அம்பலமானதால் பதவி விலகிய பா.ஜ.க. பொதுச் செயலாளர் சஞ்சய் ஜோஷி.



சங்கப் பரிவார வானரங்களும் பா.ஜ.க.வை எப்பாடுபட்டாவது திருத்தியமைக்க வேண்டும் என்றாலும், வரலாற்றின் தீர்ப்பு வேறு மாதிரியாக இருக்கிறது. அது பா.ஜ.க.வின் இன்றைய சீரழிவுகள், 1925-இல் ஆரம்பிக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.-ன் சித்தாந்த - செயல்பாட்டு விளைவுகளின் தர்க்கப் பூர்வ நீட்சியிலேயே கருக் கொண்டிருக்கின்றன என்பதே.

உலக வரலாற்றில் தோன்றிய, தோன்றிக் கொண்டிருக்கும் பாசிசக் கட்சிகள் எவையும் மக்களது நல்வாழ்விற்கான திட்டத்தை, சித்தாந்தத்தை கொண்டிருக்க வில்லை. மாறாக, இனவெறி, மதவெறி, சாதிவெறி முதலான சிறுபான்மையினர் மீதான வெறுப்பையே பெரும்பான்மையினரின் நலனாக முன்வைக்கின்றன. ஹிட்லரையும், முசோலினியையும் வெளிப்படையாக ஆதரித்த கோல்வால்கரின் ஆர்.எஸ்.எஸ்., அதன் நிறுவனரான ஹெட்கேவார் காலத்திலேயே பார்ப்பன மேல்சாதியினரின் அதிகார வேட்கை நலனையும், முசுலீம்களை எதிர்த்து ஒடுக்குவதையுமே திட்டமாகக் கொண்டிருந்தது. அதனால்தான் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் கலந்து கொள்ள மறுத்த ஆர்.எஸ்.எஸ்., முசுலீம்களின் எதிர்ப்புக்காக பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தது.

பா.ஜ.க.வின் முந்தைய அவதாரமான பாரதிய ஜனசங்கம் 1950-இல் ஆர்.எஸ்.எஸ்.-இன் விருப்பப்படி சியாம் பிரசாத் முகர்ஜி என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தின் ஏனைய இந்து அமைப்புக்கள் வெறும் பார்ப்பன உயர்சாதியினரால் மட்டும் அறியப்பட்டிருந்தபடியால், எல்லா ''இந்து''க்களையும் சேர்க்க வேண்டும் என்பதே ஜனசங்கத்தின் நோக்கமாக இருந்தது. 1949-இல் தொடங்கப்பட்ட அகில பாரதிய வித்யார்த்தி பரிசத் எனும் மாணவர் அமைப்பு, மாணவர்கள் ஆசிரியர்கள் காலில் விழுந்து சேவித்து குருபூசை செய்ய வேண்டும் என்பதற்காகவும்; 1960-களில் ஆரம்பிக்கப்பட்ட பாரதிய மஸ்தூர் சங்கம் எனும் தொழிலாளர் அமைப்பு, தொழி



படிப்பகம்

www.padippakam.com

லாளர்கள் தமது வர்க்க நலனைத் துறந்து முதலாளிகளுடன் இணைந்து தேச உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவும்; 1967-இல் தோற்றுவிக்கப்பட்ட விசுவ இந்து பரிசத் வெளிநாடுகளில் குடியேறிய பணக்கார இந்துக்களிடம் காசு வசூலிக்கவும், நடுத்தர இந்துக்களிடம் வெறியை உண்டாக்குவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.





இங்கே நாம் வலியுறுத்தும் விசயம் என்னவென்றால், சங்கப் பரிவார அமைப்புக்கள் எல்லாமும் தமது தோற்றத்திலேயே மக்களது நலனுக்காக பிறக்கவில்லை என்பதே. மற்றபடி இந்த வானரங்கள் அனைத்தும் பசுவதைத் தடைச் சட்டம், மதமாற்ற அபாயம், முசுலீம்கள் - கிறித்துவர்களை எதிர்த்துக் கலவரம், வடகிழக்கு மற்றும் காசுமீரின் தேசிய இனப் போராட்டங்களை ஒடுக்குவது, காசுமீருக்கு அளிக்கப்பட்டிருக்கும் 370-வது சட்டப்பிரிவை நீக்குவது, சமஸ்கிருதத்தை வளர்ப்பது முதலான இவைதான் கடந்த 80 ஆண்டுகளாக நடத்திய 'மக்கள் போராட்டங்கள்.'

இப்படி தோற்றத்திலும் நடத்தையிலும் மக்களுக்குப் பொறுப்பாக இருக்கத் தேவையில்லை எனும்போது, நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்பதற்கு லஞ்சம் வாங்கியதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? மேலும், சங்கப் பரிவார அமைப்புக்கள் அனைத்தும் முதலாளிகள் - பணக்காரர்களின் காசைப் பெற்றுக் கொண்டுதான் உயிர் வாழுகின்றன. பிரமோத் மகாஜன் எனும் தலைவரின் சிறப்புத் தகுதியே அவர் மும்பய் முதலாளிகளிடம் நன்கொடை வாங்குவதில் கில்லாடித் தரகர் என்பதுதான். இன்றும் வெளிநாட்டுப் பணத்தைக் கணக்கில்லாமல் வாங்கி வரும் அமைப்புக்களில் முதலிடம் பெறுவது விசுவ இந்து பரிசத் இயக்கம்தான். அம்பானியின் ரிலையன்ஸ் தொலைபேசி நிறுவனத்திற்கு மகாஜன் மந்திரியாக இருந்த போது செய்த 'சேவைக்காக' அவருக்கு ரிலையன்ஸ் பங்குகள் கணிசமான அளவில் பரிசாக ஒதுக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. உறுப்பினர்கள் முதலாளிகளின் சங்கங்களுக்காகத்தானே கேள்வி கேட்டுப் பணம் பெற்றார்கள்; எனில், மகாஜன் செய்தது மட்டும் சரி என்றால் இவர்களது செய்கையும் சரி என்றுதானே கூற முடியும்? தெகல்கா அம்பலமாக்கிய ஆயுதபேர ஊழலில் சிக்கிய பங்காரு லட்சுமணனும் கூட கட்சிக்காகத்தானே நன்கொடை பெற்றார்? ஒருவேளை, இவர்கள் வீடியோவில் சிக்கியது மட்டும்தான் பிரச்சினையை ஏற்படுத்தியது என்றும் கூறலாம்.

அடுத்து, பா.ஜ.க.வில் தலைவர்களிடையே நடக்கும் கோஷ்டிச் சண்டைகளுக்கு காரணம் என்ன? முதலில் சங்கப் பரிவாரங்களில் தலைவர்களாக வருவதற்கு என்ன தகுதி வேண்டும்? இவர்கள் எவரும் மக்கள் நலனுக்கான போராட்டங்கள் நடத்தி பிரபலமாக உருவானர்களல்லர். காரணம், இந்த அடிப்படை அவர்களது திட்டத்திலேயே கிடையாது. இவர்களது முதல் தகுதி பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். மற்ற தகுதிகள் என்ன? கட்சியின் அனைத்து கோஷ்டிகளையும் ஒரு தேர்ச்சியான தரகனைப் போல அரவணைத்துச் செல்வதால் வாஜ்பாயி தலைவரானவர். மேலும், இந்துத்துவாவின் மென்மையான முகம் என்ற முகமூடியையும் கச்சிதமாக வெளிப்படுத்தியவர். அத்வானி, இந்துத்துவாவின் அடிப்படைத் திட்டங்களை ஜனரஞ்சகமாக மாற்றிப் பிரபலமாக்கியதால் தலைவரானார். மகாஜன், அருண்ஜெட்லி போன்றவர்கள் இந்தியாவின் தரகு - பன்னாட்டு முதலாளிகளின் தொடர்புகளைச் சிறப்பாகப் பராமரித்ததற்கும், படித்த நடுத்தர வர்க்கத்தினரை கவருமளவுக்கு இங்கிதமாகப் பேசும் திறமையினாலும் தலைவர்களானார்கள்.

ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா, பெரும் அரச குடும்பத்தின் இளவரசி என்பதால் தலைவரானார். உமாபாரதியும், சாத்வி ரிதம்பராவும், தமது அனல் கக்கும் இந்துவெறிப் பேச்சுத் திறமையால் தலைவர்களானார்கள். பா.ஜ.க.வின் தற்போதைய தலைவர் ராஜ்நாத் சிங், உ.பி.யின் மேல்சாதியினரின் ஆதரவினாலும், அவர்களது கிரிமினல் கும்பல்களை அரசியலுக்குப் பயன்படுத்தும் திறமையாலும் தலைவரானார். இந்த வகையில் தலைவர்கள் உருவாகும் போது கோஷ்டித் தகராறுகள் எப்படி நடக்காமல் இருக்க முடியும்?

மாஃபியா கும்பலைச் சேர்ந்த பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணாநந்த் ராய் கொல்லப்பட்டதை, முசுலீம் எதிர்ப்புக் கலவரமாக மாற்றும் நோக்கத்தோடு, லக்னோ நகரில் கலவரத்தில் ஈடுபடும் பா.ஜ.க. குண்டர்கள்.



மேலும், சங்கப் பரிவாரங்கள் எவற்றிலும் ஜனநாயகம் என்பது கிஞ்சித்தும் கிடையாது. தலைவர்கள் எவரும் தொண்டர்களால் தெரிவு செய்யப்படுவதில்லை. எல்லோரும் பழைய தலைவர்கள் அல்லது ஆர்.எஸ்.எஸ்.-ஆல் நியமிக்கப்பட்டு வந்தவர்கள்தான். அத்வானி தலைவர் பதவியிலிருந்து இறக்கப்பட்டு, ராஜ்நாத் சிங் ஏற்றப்பட்டது ஆர்.எஸ்.எஸ்.-இன் நிர்ப்பந்தம் காரணமாகத்தான்.

அதேபோல, மத்தியப் பிரதேசத்தின் முதலமைச்ச



படிப்பகம்

ராக சௌகான் பதவி ஏற்றது அம்மாநில பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்களை வைத்தல்ல; மாறாக, பா.ஜ.க. செயற்குழுவின் உத்தரவின்படிதான் அவர் முதல்வராக்கப்பட்டார். இதை எதிர்த்த உமாபாரதி கட்சியை விட்டே நீக்கப்பட்டார். அப்படி நீக்கப்பட்டதும், உமாபாரதிக்கு ஞானோதயம் வந்து, கட்சித் தலைமை உயர்சாதியினரால் நிரம்பி வழிகிறதென்று புலம்புகிறார். ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்சனும், உமாபாரதி மோசமான கலாச்சாரப் பின்னணி கொண்ட குடும்பத்திலிருந்து வந்ததாக வசைபாடுகிறார். இதே உமாபாரதிக்கு பதவியில் இருக்கும் வரை பா.ஜ.க.வின் உயர்சாதி ஆதிக்கம் நினைவுக்கு வரவில்லை. மண்டல் கமிசனை அமலாக்குவதை எதிர்த்து பா.ஜ.க.வும், ஏ.பி.வி.பி.யும் போராட்டம் நடத்தியபோது ஆதரித்ததும் இதே உமாபாரதிதான். பாபர் மசூதியை இடிக்க வேண்டும் என்று வடஇந்தியா முழுவதும் உமாபாரதி முழங்கிய போது, ஆர்.எஸ்.எஸ்.-இன் கண்களுக்கு நல்ல சந்தியாசினியாகத்தான் தெரிந்தார்.





**உமா பாரதி பா.ஜ.க.வில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து, அவரது ஆதரவாளர்கள் போபாலிலும் (மேல்படம்), சிவசேனாவில் இருந்து பதவி விலகிய ராஜ் தாக்கரேயின் ஆதரவாளர்கள் மும்பயிலும் நடத்திய கலவரங்கள். மற்ற ஓட்டுக் கட்சிகளுக்கும், இந்து மதவெறி கட்சிகளுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?**

ஆக, சங்கப் பரிவாரங்களின் தலைவர்கள் மக்கள் போராட்டத்திலிருந்தோ, அணிகளின் ஜனநாயகத் தெரிவு மூலமோ உருவாகவில்லை எனும்போது, அவர்கள் குழாயடிச் சண்டையில் ஈடுபடுவதோ, லஞ்ச லாவண்யங்களில் ஊறித் திளைப்பதோ ஆச்சரியமானதல்ல.

பா.ஜ.க.வைக் கண்காணிப்பதற்காக பா.ஜ.க. பொதுச்செயலாளராக ஆர்.எஸ்.எஸ்.-ஆல் அனுப்பப்பட்டவர் சஞ்சய் ஜோஷி. இவர் ஒரு பெண்ணுடன் உறவு கொள்ளும் ''சி.டி.'' சுற்றுக்கு விடபட்டதன் பின்னணியில் சில பா.ஜ.க. தலைவர்கள் இருப்பதாக எம்.ஜி.வைத்யா எனும் ஆர்.எஸ்.எஸ். தலைவர் குற்றம் சாட்டுகிறார். இங்கும் ஆர்.எஸ்.எஸ்.-இன் ஒழுக்கம் கேவலமானது குறித்து வருத்தமில்லை. அது வெளியே வந்ததுதான் பிரச்சினை. ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. தலைவர்களின் இத்தகைய கள்ள உறவுக் கதைகள் இதற்கு முன்னரே அரசல் புரசலாக வெளிவந்திருப்பினும், தற்போதைய ''சி.டி.'' அளவுக்கு நாறவில்லை. இதை யாருக்கும் தெரியாமல் அமுக்குவதே ஆர்.எஸ்.எஸ்.இன் 'கட்டுப்பாடு' ஆகும். ஜெயேந்திரன் சங்கரமட லீலைகள் தெருவுக்கு வந்து நாறினாலும், ஆர்.எஸ்.எஸ். அதை மறுப்பதையே கட்டுப்பாட்டுடன் செய்து வந்தது.

பா.ஜ.க.வை ஆதிக்கம் செய்யும் ஆர்.எஸ்.எஸ்.-க்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என விரும்பிய பா.ஜ.க. தலைவர்களே இந்த ''சி.டி.''யை வெளியே கொண்டு வந்தனர். இதேபோல மோகன் பகவத், சுரேஷ் சோனி போன்ற ஆர்.எஸ்.எஸ்.-இன் தலைவர்களது மன்மத லீலை ''சி.டி.''க்கள் விநியோகத்திற்குத் தயாராக இருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. போகிற போக்கைப் பார்த்தால், ஆர்.எஸ்.எஸ். தனது பிரச்சாரக்குகளின் ஆண் குறிகளுக்கு ஏதாவது பூட்டு போட்டால்தான் பிரச்சினை தீரும் போலிருக்கிறது.

21-ஆம் நூற்றாண்டில் தனது இயக்கத்தில் பெண்களை உறுப்பினராக சேர்க்க மறுக்கும் ஒரே கட்சி ஆர்.எஸ்.எஸ். ஆகத்தான் இருக்க முடியும். இப்படி பெண்களை ஒழுக்கத்திற்கு எதிராகப் பார்க்கும் பார்வையில் இருந்தே மேற்கண்ட சீரழிவுக் கதைகள் தோன்றியிருக்கின்றன. இது பார்ப்பனியத்தின் கற்பு x தேவதாசி என்ற ஒரு நாணயத்தின் இரு பக்கங்களுக்கு நிகரானது. எனவே, ஆர்.எஸ்.எஸ்.-உம் கள்ள உறவுக் கதைகளும் என்றும் பிரிக்க முடியாதபடி இணைந்தே இருக்கும். அது வெளியே வந்து நாறக் கூடாது என்பதற்காகவே ஆர்.எஸ்.எஸ்.-இன் புகழ்பெற்ற 'கட்டுப்பாடு' பயிற்சி ஸ்வயம் சேவகர்களுக்குத் தரப்படுகிறது.

இப்படி கள்ள உறவில் மட்டுமல்ல, மாஃபியா வேலைகளையும் பா.ஜ.க. தலைவர்கள் செய்து வந்தனர் என்பதற்கு உ.பி.யில் கொலை செய்யப்பட்ட மொகமதாபாத் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணாநந்த் ராய் ஒரு உதாரணமாவார். இவர் உள்ளூர் மாஃபியா தலைவர் பிரஜேஷ் சிங் கும்பலைச் சேர்ந்தவர். இந்தக் கும்பலின் எதிரணித் தலைவர், மாவூ சட்டமன்ற உறுப்பினரான முக்தார் அன்சாரி ஆவார். இரு கும்பல்களுக்கும் உள்ளூர் நிழல் உலக வேலைகள் செய்வதிலும், அரசாங்க கான்ட்ராக்ட்டுகளை எடுத்துச் செய்வதிலும் பலத்த போட்டி நிலவி வந்தது. இருதரப்பிலும் கடந்த சில ஆண்டுகளாக பலர் கொலை செய்யப்பட்டனர். இந்த மாஃபியா - ரவுடியிசத்தில், கிருஷ்ணாநந்த் ராய் சமீபத்தில் கொல்லப்பட்டார். உலகத்துக்கே தெரிந்த இந்த மாஃபியா கும்பல் தலைவனது கொலையை முசுலீம் மக்களுக்கு எதிரான கலவரமாக மாற்றித் தனது புனிதத்தை பா.ஜ.க. காப்பாற்ற முயல்கிறது. கடைசியில், மதவெறி என்பது மாஃபியாக்களை மறைப்பதற்கான விசயமாக சுருங்கி விட்டது.

கேரளத்திலும் இதே கதைதான். ''இன்றைய கேரள பி.ஜே.பி.யின் தலைவர்கள் பலரது சொத்து மதிப்பு பத்து கோடிக்கு அதிகமிருக்கும். பி.ஜே.பி.

www.padippakam.com

மத்தியில் ஆட்சி செய்தபோது பெட்ரோல் பங்கு ஒதுக்கீடுகளில் நடந்த முறைகேடுகள் அனைவரும் அறிந்ததே. மேலும், நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிமின் பினாமி கட்டுமான நிறுவனத்துடன் நெருங்கிய உறவு கொண்டவர்கள் கூட கேரள பா.ஜ.க.வில் உள்ளனர்.'' இது ஏதோ பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சியினரின் வாக்குமூலம் அல்ல. கேரள பா.ஜ.க.வின் முக்கிய தலைவரான ஓ.ராஜகோபாலின் வாக்குமூலம் தான் இது. 2004-இல் நடந்த தேர்தலில் திருவனந்தபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் 2,28,000 ஓட்டு வாங்கி தோற்ற பா.ஜ.க., சமீபத்தில் அத்தொகுதியின் உறுப்பினர் மறைவால் நடந்த இடைத்தேர்தலில் வெறும் 36,000 ஓட்டுக்கள் மட்டும் பெற்று டெபாசிட்டையும் இழந்தது. ஆர்.எஸ்.எஸ். ஆதரவுடன் இயங்கும் பா.ஜ.க. தலைவர்களது சதியே இந்த படுதோல்விக்கு காரணம் என்பது ராஜகோபாலின் குற்றச்சாட்டு. அதற்கு ஆதாரமாகத்தான் மேற்கண்ட வாக்குமூலம்.

வாக்குகள் 2 லட்சத்திற்கு அதிகம் வாங்கியபோது அவருக்கு இந்த மனக்குறை இல்லை. வாக்குகள் குறைந்ததும் தான் தனது கட்சியை அம்பலப்படுத்தும் தேவை வந்திருக்கிறது. இவ்வளவு நாள் இதுபற்றி வாய்திறக்காத ராஜகோபாலின் யோக்கியதையும், வாய் திறந்தால் பா.ஜ.க.வின் யோக்கியதையும் இப்போது சேர்ந்து அம்பலமாயிருக்கிறது.

எனவே, பா.ஜ.க.வின் கடந்த 25 வார சந்தி சிரிக்கும் சம்பவங்கள் எல்லாமும், அதன் 80 ஆண்டு பாரம்பரியத்தின் விளைபொருள்தானே தவிர விதிவிலக்குகள் அல்ல.

● தமிழ்மணி

# கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை! போலீசுக்குத் தெரியுமா மனித உரிமை!

தஞ்சை - திருவையாற்றில் கடந்த 19.1.06 அன்று நடந்த தியாகராசர் ஆராதனை விழா நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்கச் சென்ற ''தினமணி'' நாளேட்டின் புகைப்படக்காரர் கதிரவனை, திருவையாறு போலீசு ஆய்வாளர் முருகவேல் மற்றும் சில போலீசாரும், திருவாரூரிலிருந்து வந்த சீருடையணியாதப் போலீசு முருகதாசும் சேர்ந்து மூர்க்கத்தனமாகத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர். புகைப்படக்காரர் கதிரவன் செய்த மிகப் பெரிய 'குற்றம்' என்னவென்றால், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் மனைவியையும் அம்மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் மனைவியையும் ஆராதனை நிகழ்ச்சியைப் பார்க்க விடாமல் மறைத்துக் கொண்டு நின்று படம் எடுத்தது தான்.

தியாகராஜர் ஆராதனை நிகழ்ச்சியில் பஞ்சரத்தினக் கீர்த்தனை பாடப்படும் நேரம் மிகமிகப் புனிதமானது என்ற பொய்யை பார்ப்பனக் கும்பலும், அதிகார வர்க்கமும் பத்திரிகைகள் மூலம்தான் பரப்பி வருகின்றன. அந்த நிகழ்ச்சியைப் படம் பிடிப்பதைத் தவறவிட்டால், பத்திரிகை நிர்வாகம் அந்தப் புகைப்படக்காரர் மேல் ஆத்திரமடையும். எனவே, அந்த நேரத்தைத் தவறவிடாமல் புகைப்படம் எடுப்பதில் எல்லா நிருபர்களும் முனைப்புக் காட்டுவர். அப்படித்தான் ''தினமணி'' புகைப்படக்காரர் கதிரவனும் புகைப்படம் எடுக்க முற்பட்டார். இந்தச் சில நிமிட இடையூறு கூட எஸ்.பி. மனைவிக்கும், கலெக்டர் மனைவிக்கும் நேர்ந்து விடக் கூடாது என்பதால்தான் போலீசு மிருகங்கள் கதிரவனைத் தாக்கியிருக்கின்றனர். தாக்கிய போலீசார் தெருப் பொறுக்கிகளை விடக் கேவலமான, ஆபாசமான வார்த்தைகளால் கதிரவனைத் திட்டியிருக்கின்றனர். இதனைக் கண்டு, அங்கிருந்த சாதாரண மக்கள் போலீசைத் தடுத்து எதிர்த்துப் பேசினர். விழாப் பாதுகாப்புக்குப் பொறுப்பான டி.எஸ்.பி. மற்றும் அரசு வழக்குரைஞர் முன்னிலையிலேயே இந்தத் தாக்குதல் நடந்தது. ஆனால் அவர்களோ, அங்கிருந்த விழா அமைப்பாளர்கள் ஜி.ஆர். மூப்பனாரோ, குன்னக்குடி வைத்தியநாதனோ இந்த அநீதிக்கு எதிராக வாயே திறக்கவில்லை. பாதுகாப்புக்கு என வரும் போலீசு, இப்பார்ப்பன விழாவை கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, இப்போது போலீசுதுறை விழாவாக மாற்றிவிட்டது என்பதற்கு இத்தாக்குதலே சான்று கூறப் போதுமானது.

பத்து ஆண்டுகளுக்கு முன் இதே ஆராதனை விழாவில், ''தமிழில் பாடு'' என ம.க.இ.க. தோழர்கள் முழக்கமிட்டதைக் கண்டித்து பத்திரிகைகளில் எழுதிய பார்ப்பனக் கும்பல், ஒரு பத்திரிக்கையாளர் தாக்கப்பட்டதை விட்டு விடட்டும்; ஒரு போலீசுகாரன் அத்தனை பெண்கள் மத்தியில் அருவெறுப்பாகவும், ஆபாசமாகவும் பேசி 'புனித'த்தைக் கெடுத்திருக்கிறானே அதைப்பற்றி ஏன் வாய் திறக்கவில்லை?

விழாக்குழுவினர் கதிரவனுக்கு வி.ஐ.பி. அட்டை வழங்கியிருந்தனர். ஆனால், போலீசுகாரனைப் பொருத்தவரை வி.ஐ.பி. அட்டை வைத்திருப்பதால் வி.ஐ.பி. ஆகிவிட முடியாது; சொத்தும் அதிகாரமும் இருந்தால்தான் வி.ஐ.பி! அதனால்தான், அரசு வாகனங்களைத் தன் சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்திய கலெக்டர் மனைவியும், எஸ்.பி. மனைவியும் குற்றவாளிகளாகத் தெரியவில்லை. சட்டபூர்வமாகத் தன் கடமையைச் செய்த புகைப்படக்காரர் கதிரவன், போலீசுக்குக் குற்றவாளியாகிவிட்டார். வழக்குப்பதிவு, ஆர்.டி.ஓ. விசாரணை என நாடகமாடி, இப்பிரச்சினையை மூட்டைகட்டி குப்பையில் போட்டுவிட்டது, போலீசு.

போலீசாரால் அடித்து இழுத்துச் செல்லப்படும் ''தினமணி'' புகைப்பட நிருபர் கதிரவன்.



குற்றமிழைத்த போலீசார் கைது செய்யப்படவில்லை. குற்றவாளிகள் கைது செய்யப்படும் வரை பத்திரிகையாளர்கள் அரசு நிகழ்ச்சிகளை முற்றாகப் புறக்கணிப்பதே சரியான எதிர்நடவடிக்கையாக அமையும். ஆனால், தஞ்சையில் உள்ள பத்திரிகையாளர்களோ இதனை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. ஜனநாயக உணர்வு - சுயமரியாதையைவிட சுயநலனும், பொருளாதார ஆதாயமுமே பெரும்பாலான பத்திரிகையாளர்களிடம் மேலோங்கி நிற்கிறது.

— ம.க.இ.க., தஞ்சை.



படிப்பகம்

www.padippakam.com

## நகர்ப்புற புத்தாக்கத் திட்டம்:

# ஏழைகளை விரட்டியடிக்கும் ஏகாதிபத்திய சதி!

அக்டோபர் - நவம்பர் மாதங்களில் பெய்த பேய் மழை - புயலால், தமிழகமே வெள்ளக் காடாக மாறித் தத்தளித்தது. தமிழகத்திற்கு முன்பாக, ஒரே ஒருநாள் கொட்டித் தீர்த்த அடைமழையால், மும்பய் மாநகரமே மூழ்கிப் போனது. இந்த மழை - வெள்ளம் பங்களாவாசிகளைக் கூட விட்டு வைக்காததால், அப்பெருமக்கள் அனைவரும் நாட்டின் அடிக்கட்டுமான வசதி பற்றி அங்கலாய்த்து வருகிறார்கள்.

இந்த நகர்ப்புற மேட்டுக்குடி வர்க்கத்தின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம், ''ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புத்தாக்க செயல்முறைத் திட்டம்'' என்ற பெயரில், ஒரு பிரம்மாண்டமான திட்டத்தை மைய அரசு அறிவித்திருக்கிறது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 63 நகரங்கள்; சுற்றுலாவிற்கும், கடவுள் வழிபாட்டிற்கும் (இந்து மத புண்ணிய ஷேத்திரங்கள்!) பேர்போன 23 நகரங்கள் - ஆக மொத்தம் 86 நகரங்கள், அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள், ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டில், உலகத்தரம் வாய்ந்த நகரங்களாக மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாலைகள் போடுவது; சாக்கடைகள் அமைப்பது என்பதோடு மட்டும் இந்தத் திட்டம் நின்றுவிடப் போவதில்லையாம்; நகர்ப்புற ஏழை மக்களுக்கு, அவர்களின் வாங்கும் சக்திக்கு ஏற்றவாறு வீடு கட்டிக் கொள்ளக் கடன் கொடுப்பது; இதன் மூலம் நகர்ப்புற சேரிகளை ஒழித்துக் கட்டுவது; இதன் விளைவாக, நகர்ப்புறக் குற்றங்கள்; சுகாதாரச் சீர்கேடு, சுற்றுப்புறச் சூழல் மாசடைவது போன்ற நகர்ப்புற பிரச்சினைகள் அனைத்தையும் ஒழித்துக் கட்டுவது என இந்தத் திட்டத்தின் மகாத்மியங்களை பிரதமர் மன்மோகன் சிங்கே, பத்திரிகையாளர்களிடம் அடுக்கித் தள்ளியிருக்கிறார்.

இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட சூடு தணிவதற்குள்ளாகவே, தமிழகத்தைச் சேர்ந்த சென்னை, மதுரை, கோவை ஆகிய மூன்று நகரங்களையும் 1,050 கோடி ரூபாய் செலவில் புத்தாக்கம் செய்யப் போவதாக அறிவித்துவிட்டார், ஜெயா. ஆளும் கும்பல் கூறுவது போல, இந்த நகரங்கள் அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் உலகத் தரம் வாய்ந்ததாக மாறிவிடலாம். ஆனால், இப்படி மாற்றப்பட்ட நகரங்களில் ஏழைகளால் வசிக்க முடியுமா? ஏழைகளை வசிக்க விடுவார்களா என்பதுதான் மையமான பிரச்சினை.

உலகவங்கி மற்றும் ''யு.எஸ்.எய்ட்'' என்ற இரு ஏகாதிபத்திய நிறுவனங்களின் மூளையில் உதித்த இந்தத் திட்டம், பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெற்ற பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டு, காங்கிரசு கூட்டணி ஆட்சியில் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இந்தத் திட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமல், அதன் ஒப்புதலைப் பெறாமல் நடைமுறைக்கு வந்திருப்பதாகவும்; பன்னாட்டு நிறுவனங்கள் கொடுத்த ஆலோசனைகள் தான் இந்தத் திட்டத்தின் விதிமுறைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அம்பலப்படுத்தியிருக்கிறார். மன்மோகன் சிங்கின் ஆட்சி, ஏகாதிபத்திய அடிவருடி ஆட்சி என்பதற்கு இந்தத் திட்டம் இன்னுமொரு எடுத்துக்காட்டு.

''சிங்கார சென்னை'', ''அழகு மும்பய்'', ''பசுமை தில்லி'' என்பது போன்ற பல்வேறு பெயர்களில், ''நகரங்களை அழகுபடுத்துவது'' என்ற உலக வங்கியின் திட்டம் நடைமுறைக்கு வந்ததில் இருந்து, நகர்ப்புற ஏழைகளின் குடிசைகளும் ஒண்டுக் குடித்தன வீடுகளும் ஆக்கிரமிப்பு எனக் குற்றம் சாட்டப்பட்டு இடித்துத் தள்ளப்படுகின்றன; நடைபாதை சிறு வியாபாரிகள் அடித்துத் துரத்தப்படுகின்றனர். ''பொது இடத்தை ஆக்கிரமித்த இவர்கள் திருடர்கள்'' என நீதிபதிகள் நாக்கூசாமல் தீர்ப்பளிக்கின்றனர். ஏழைகளிடமிருந்து பிடுங்கப்படும் நிலம், ரியல் எஸ்டேட் அதிபர்களால் ஆக்கிரமித்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தில் திருத்தங்கள் செய்வதன் மூலம், இந்த ஆக்கிரமிப்பு சட்டபூர்வ அங்கீகாரமும் பெற்று விடுகிறது.

''நகரங்களை அழகுபடுத்துவது'' என்ற பெயரில் ஏழைகளை அடித்துத் துரத்தும் திட்டம்தான் இப்பொழுது நகரப் புத்தாக்கத் திட்டமாக ஊதியிருக்கிறது. இந்தத் திட்டத்தை தனியார் முதலாளிகளோடு கூட்டுச் சேர்ந்து நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்துள்ள மைய அரசு, இந்தத் திட்டத்தின் கீழ் மைய அரசிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு மாநில அரசுகள், தங்களின் நகராட்சி நிர்வாகச் சட்டங்களைத் திருத்த வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்திருக்கிறது.

இந்த நகரப் புத்தாக்கத் திட்டம் என்பது குடிநீர், சாலை, போக்குவரத்து, கழிவுநீர் அகற்றுதல் போன்ற அடிக்கட்டுமான வசதிகளைச் செய்து தருவது மட்டுமல்ல; நல்ல நகர நிர்வாகத்தை மக்களுக்கு வழங்குவதையும் உள்ளடக்கி

கிழக்கு தில்லி பத்பர்கஞ்ச் பகுதியில் இருந்த ஏழைகளின் குடிசைகள் அரசு இயந்திரத்தால் மண்மேடாக்கப்பட்ட பிறகு, வீடிழந்த தொழிலாளர்கள் தெருவிலேயே வசித்து வரும் அவலம்.





படிப்பகம்

www.padippakam.com

யது என ஒளிவட்டம் போடப்படுகிறது.

உலக வங்கியின் மொழியில் நல்ல அரசாட்சி என்றால், அது மக்களுக்குப் பொறுப்பாக இருந்து, மக்களின் நலனுக்காகப் பணியாற்றக் கூடியது அல்ல. மாறாக, ''புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த வெளிச் சந்தையில் கடனைத் திரட்டும் தகுதியினைப் பெறும் அளவிற்கு, உள்ளூர் நிர்வாகங்களைப் பொருளாதார ரீதியாக வசதியாக இருக்கும்படி மாற்றியமைப்பது'' தான் நல்ல நிர்வாகம் என்கிறது இந்தத் திட்டம்.

அதாவது, கஜானாவின் கனம்தான் நல்ல நிர்வாகத்தை அளக்கும் அளவுகோல். கஜானாவை எப்படி நிரப்புவது என்ற கேள்விக்கு, நகராட்சி வழங்கும் சேவைகளுக்கு நியாயமான கட்டணத்தை மக்களிடமிருந்து வசூலிக்க (பிடுங்க) வேண்டும் என்கிறது இந்தத் திட்டம். தண்ணீர், மின்சாரம், மருத்துவம், கழிவுநீர் அகற்றுதல், போக்குவரத்து போன்ற சேவைகள் இனி குறைந்த கட்டணத்தில் கிடைக்காது. ஊரை (மக்களை)க் கொள்ளையடித்து, நகராட்சி கஜானாவை நிரப்ப வேண்டும் என்பதுதான் நல்ல நிர்வாகத்தின் பச்சையான பொருள்.

''யு.எஸ்.எய்ட்'' என்ற அமெரிக்க நிறுவனம், உள்ளூராட்சி அமைச்சரவையுடன் இணைந்து, மாநகராட்சி / நகராட்சி / பஞ்சாயத்து நிர்வாகங்களில் என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டு, ''மாதிரி நகராட்சி சட்டத்தை'' உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இதன்படி,

- நகர அடிக்கட்டுமான திட்டங்களை மேம்படுத்துவது, அவற்றை நிர்வகிப்பது ஆகிய பணிகளில் தனியார் துறையை அனுமதிக்க வேண்டும்.

- நகராட்சிகள் வழங்கி வரும் சேவைகளின் கட்டணத்தை அரசாங்கமே தன்னிச்சையாகத் தீர்மானிக்காமல், அப்பொறுப்பை சுதந்திரமாக இயங்கக் கூடிய ஒழுங்குமுறை ஆணையத்தை அமைத்து, அதனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.



வேலை தேடி ஹைதராபாத் ரயில் நிலையத்தில் வந்து இறங்கும் கூலித் தொழிலாளியின் குடும்பம். இந்த தினக் கூலிப் பட்டாளத்தை நகரத்தில் தங்க விடாமல் துரத்தியடிப்பதுதான் நகரப் புத்தாக்கத் திட்டத்தின் நோக்கம்.

- சொத்துக்களைப் பதிவு செய்யும் பொழுது செலுத்தக் கூடிய முத்திரைத் தாள் கட்டணத்தை, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள், சொத்தின் மதிப்பில் ஐந்து சதவீதத்திற்குள் இருக்குமாறு குறைத்து விட வேண்டும்.

- நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும்.

- தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும் வண்ணம் வாடகை கட்டுப்பாடு சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

- குடிநீர் வழங்கும் சேவையை மேம்படுத்தும் வண்ணம், புதிய அமைப்பை உருவாக்க வேண்டும்.

- ரியல் - எஸ்டேட் வியாபாரம், கட்டுமானத்துறை தொடர்பான விதிமுறைகளைத் திருத்த வேண்டும்.

- விவசாய நிலங்களை, விவசாயம் சாராத தொழில்களுக்குப் பயன்படுத்தும் வண்ணம் சட்டங்களை எளிமையாக்க வேண்டும்.

- கட்டாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நகராட்சி ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது; நகராட்சிப் பணிகளுக்குப் புதிதாக ஆளெடுப்பதற்குத் தடைவிதிப்பது போன்ற நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், நகர்ப்புற நிலங்களையும், கொழுத்த இலாபம் தரக் கூடிய நகர்ப்புற சேவைகளையும் தனியார் முதலாளிக்கு பட்டா போட்டுக் கொடுக்கும் ஏஜெண்டு சேவையைத்தான் இனி நகராட்சிகளும், பஞ்சாயத்துகளும் செய்ய வேண்டும் என்பதைத்தான் ''மாதிரி நகராட்சி சட்டம்'' பூசி மெழுகிச் சொல்கிறது.

யு.எஸ்.எய்ட் பரிந்துரைத்துள்ள இந்த மாதிரிச் சட்டம், காகிதத்தோடு நின்றுவிடவில்லை. தில்லி யூனியன் பிரதேச அரசு, இப்பரிந்துரைகளின்படி, தில்லி நகராட்சி சட்டங்களைத் திருத்தியிருப்பதோடு, தில்லி குடிநீர் சேவையையும் (பகுதியளவு) தனியார்மயமாக்கி விட்டது. தமிழக அரசு, சென்னை மற்றும் மதுரை நகரங்களின் குடிநீர் சேவையை மேம்படுத்தவும், கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கவும் இத்திட்டத்தின் கீழ்தான் 651 கோடி ரூபாய் நிதி ஒதுக்க கோரியுள்ளது. எனவே, தில்லிக்கு அடுத்து தமிழகத்திலும் குடிநீர் சேவை தனியார்மயமாவதையும்; உள்ளூராட்சி சட்டங்கள் திருத்தப்படுவதையும் விரைவில் எதிர்பார்க்கலாம்.

தனியார்மயம் - தாராளமயத்தால் வேலையிழந்த கிராமப்புற விவசாயிகள், வேலை தேடி நகர்ப்புறங்களில் குவிகிறார்கள். இந்த வேலையில்லா பட்டாளத்தின் உழைப்பை, குறைந்த கூலிக்குச் சுரண்டிக் கொள்ளும் முதலாளிகள், அவர்கள் நகரத்தில் குடிசை போட்டுத் தங்கிக் கொள்வதை இந்த நகரப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் தடுக்கிறார்கள். ஏழைகளின் குடிசைகளை மட்டுமல்ல, நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் சொந்த வீட்டுக் கனவையும் இந்தத் திட்டம் பறித்துவிடும். நகர்ப்புறங்களில் ஆலைகள் இருந்த இடம் அடுக்கு மாடிக் குடியிருப்புகள், நட்சத்திர விடுதிகள், சூப்பர் மார்க்கெட்டுகளாக மாறிவிடும். நகர்ப்புறம், மேட்டுக்குடி கும்பலாலும், தனியார் முதலாளிகளாலும் முழுமையாக ஆக்கிரமிக்கப்படும். நகர புத்தாக்கத்தின் பின்னே இருக்கும் ஆபத்து இதுதான்!

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# ஏழை நாடுகளின் சுற்றுப்புறச் சூழலை அழிப்பது யார்?

**மக்கும் குப்பை, மக்காத குப்பை எனப் பிரித்துப் போட வேண்டும் என்று மக்களுக்கு உபதேசிக்கும் ஆளுங் கும்பல், ஏகாதிபத்திய நாடுகளின் கழிவுகளை அமெரிக்க டாலருக்காக இறக்குமதி செய்து, இந்தியாவைக் குப்பைத் தொட்டியாக்குகிறது.**

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இந்தியாவிற்குப் புத்தாண்டு பரிசு ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது. அந்தப் பரிசின் பெயர் ''கிளெமோன்ஸோ'' என்ற பழைய விமானம் தாங்கி போர் கப்பல். பிரெஞ்சு கப்பற்படையில் இருந்து ஓய்வு கொடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு விட்ட இந்தப் போர் கப்பல், இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள ஆலங் துறைமுகத்தில் உடைக்கப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆலங் துறைமுகத்தில் இந்தக் கப்பல் உடைக்கப்பட்ட பின் 30 கோடி ரூபாய் பெறுமான பழைய இரும்பு கிடைக்கும். எனினும், இந்தக் கப்பல் வெறும் மூன்று கோடி ரூபாய்க்குதான் விற்கப்பட்டுள்ளது. வியாபார அளவு கோலின்படி பார்த்தால், பழைய இரும்புக்காக இந்தக் கப்பலை வாங்கிய நிறுவனத்திற்கு கொழுத்த இலாபம்தான். ஆனால், இந்தக் கப்பல் ஆலங் துறைமுகத்தில் கப்பலை உடைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்களுக்கும்; அத்துறைமுக வட்டாரத்தின் சுற்றுச்சூழலுக்கும் என்னென்ன கேடுகளை விளைவிக்கும் என்பதை இப்பொழுது கூற முடியாது. ஏனென்றால், இந்தக் கப்பலை உடைக்கும் பொழுது, நெஞ்சகப் புற்று நோயை ஏற்படுத்தக் கூடிய ஆஸ்பெஸ்டாஸ் (கல்நார்) தகடுகள், நூற்றுக்கணக்கான டன் அளவில் கழிவாகக் கிடைக்கும். இந்தக் கல்நார் கழிவை அறிவியல் ரீதியாக அப்புறப்படுத்தக்கூடிய தொழில் நுட்பம் ஆலங் துறைமுகத்தில் இல்லாததால், இந்தக் கல்நார் கழிவு இக்கப்பலை உடைக்கும் கூலித் தொழிலாளர்களையும்; அத்துறைமுக வட்டாரச் சுற்றுச்சூழலையும் மோசமாகப் பாதிக்கும் எனப் பல்வேறு சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

கல்நார் தகடுகள் இந்தியாவில் பரவலாகப் பயன்படுத்தப் பட்டாலும், இதனைத் தொழிற் துறையிலோ, வீட்டு உபயோகத் திற்கோ பயன்படுத்துவது பிரான்சு நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது. அதனால்தான் பிரெஞ்சு அரசுக்குச் சொந்தமான இந்தக் கப்பலை, பிரான்சிலேயே உடைக்காமல், இந்தியாவின் தலையில் கட்டியுள்ளனர். ஆனால், இந்திய அரசோ அந்நியச் செலாவணி வருமானம் என்ற கண்ணாடியை மாட்டிக் கொண்டு, இந்தக் கப்பலின் வருகையைப் பார்க்க வேண்டும் என நியாயப்படுத்துகிறது.

பிரான்சில் இருந்து கடந்த ஆண்டின் கடைசி நாள் (டிச.31) இரவில் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டுவிட்ட இந்தக் கழிவுக் கப்பல், பிப்ரவரி இரண்டாவது வாரம் ஆலங் துறைமுகத்தில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், ''இந்தக் கப்பலை இந்தியாவிற்கு அனுப்பக் கூடாது; பிரான்சிலேயே உடைக்க வேண்டும்'' என பிரான்சு உள்ளிட்டு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகள் நடத்திவரும் போராட்டங்களையடுத்து, இந்திய உச்சநீதி மன்றம், இந்தக் கப்பல் இந்தியாவின் கடல் எல்லைக்குள் நுழைய இடைக்கால தடை விதித்திருக்கிறது. மேலும், இந்தக் கப்பலில் சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் அபாயகரமான கழிவுகள் எவ்வளவு உள்ளன என்ற விவரத்தைத் தருமாறு பிரெஞ்சு ஏகாதிபத்திய அரசிடம் கேட்டிருக்கிறது.

தில்லியின் அழகுக்காகத் தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டு, அவர்கள் நகரை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டபொழுது; வனப் பாதுகாப்பு என்ற போர்வையில் ஆதிவாசிகள் காடுகளில் இருந்து அப்புறப்படுத்தப் பட்ட பொழுது, எந்த நீதிமன்றம் அவர்கள் தரப்பு நியாயத்தைக் கேட்க முன் வந்தது? இந்தக் கழிவுக் கப்பல் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குச் சொந்தம் என்பதால், உச்சநீதி மன்றத்தின் ''நடுநிலையான நியாய உணர்ச்சி'' விழித்துக் கொண்டுவிட்டது.

இந்தக் கப்பலில் வெறும் 45 டன் கல்நார் கழிவுகள்தான் இருப்பதாகவும்; எஞ்சியவற்றை இந்தியாவிற்கு அனுப்பும் முன் பிரான்சிலேயே அப்புறப்படுத்திவிட்டதாகவும் பிரெஞ்சு அரசு கூறுகிறது. ஆனால், இந்தக் கப்பலில் இருக்கும் கல்நார் கழிவுகளை அகற்ற பிரெஞ்சு அரசால் ஒப்பந்தம் செய்யப்பட்ட, ''டெக்னோப்யூர்''

**இந்தியாவைக் குப்பைத் தொட்டியாக்காதே எனக் கோரி, கிளெமோன்ஸோ கப்பல் இந்தியாவிற்குள் நுழைவதை எதிர்த்து, பசுமை இயக்கத்தினர் தில்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம்.**






படிப்பகம்

என்ற பிரான்சு நிறுவனம், பிரெஞ்சு அரசு கூறுவதை மோசடி என்கிறது. இந்த நிறுவனத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் தங்களின் சொந்த செலவில் இந்தியாவிற்கு வந்து உச்சநீதி மன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில், ''இந்தக் கப்பலில் இன்னும் 500 டன்னுக்கு மேல் கல்நார் கழிவுகள் இருப்பதாக'' வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இந்தக் கப்பலில் பல ஆண்டுகள் வேலை பார்த்து, அதனால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பிரெஞ்சு கப்பற்படையைச் சேர்ந்த எடினி லீ குலிசெர், லீடஃப் என்ற இரு முன்னாள் ஊழியர்கள், ''இந்தியாவிற்கு வரும் அந்தக் கப்பலில் வெறும் 45 டன் கல்நார் கழிவுதான் இருக்கும் என்பது கேலிக்குரியது'' என ''தி இந்து'' நாளிதழுக்கு பேட்டியளித்துள்ளனர்.

இந்த உண்மைகள் ஒருபுறமிருக்க, புவியின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ள பேசல் மாநாட்டு ஒப்பந்தம், சுற்றுச் சூழலை மாசடையச் செய்யும் அபாயகரமான கழிவுப் பொருட்களை ஒருநாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்கிறது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இந்தியாவும், பிரான்சும் இந்த விதிமுறைகளை மயிரளவுக்கு கூட மதிக்கவில்லை.

உச்சநீதி மன்றம் பேசல் ஒப்பந்தத்தைக் காட்டியே, இந்தக் கழிவுக் கப்பல் இந்தியாவிற்குள் நுழைவதைத் தடை செய்திருக்க முடியும். ஆனால், மாண்புமிகு நீதிபதிகளோ, தாங்கள் விதித்துள்ள இடைக்காலத் தடையைச் செல்லாக் காசாக்கும் வண்ணம், ''வேண்டுமானால் எண்பது கோடி ரூபாயை பிணைத் தொகையாகக் கட்டிவிட்டு இந்தக் கப்பல் இந்தியாவிற்குள் நுழையலாம்'' என்ற சலுகையை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு அளித்துள்ளனர்.

இந்தக் கழிவுக் கப்பல் ஏற்றுமதியை நியாயப்படுத்துவதில், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைவிட, இந்திய ஆளுங்கும்பல்தான் முன்னணியில் நிற்கிறது. ''குஜராத் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அடிக்கட்டுமானம் நிறுவனம் பிரான்சுக்கே சென்று, இந்தக் கப்பலை ஆய்வு செய்திருப்பதாக'' குஜராத் கடல்சார் வாரியம் கூறியிருக்கிறது. இந்தக் கப்பலை உடைப்பதற்கு ஏலம் எடுத்துள்ள சிறீராம் நிறுவனத்தின் சகோதர நிறுவனம்தான் குஜராத் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அடிக்கட்டுமானம் நிறுவனம் - வேலிக்கு ஓணான் சாட்சி.



**ஆலங் துறைமுகத்தில் கப்பலை உடைக்கும்பொழுது, தனது வலது கை முறிந்து போனதால், வேறு வேலை எதுவும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட சத்ருகன் லெங்கா.**

குஜராத்தில் உள்ள ஆலங் துறைமுகத்தில் கப்பலை உடைக்கும் அபாயகரமான பணியில் ஈடுபடுத்தப்படும் ஒரிசாவையும், பீகாரையும் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள், தலைக்கவசம் கூட இல்லாமல், சுத்தியலையும், ஆக்ஸா பிளேடையும், காலாவதியாகிப் போன வெல்டிங் மிஷின்களையும் கொண்டு, தினந்தோறும் மரணத்தோடு போராடி, வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். உடைந்த கப்பல்களில் இருந்து அவர்கள் எடுத்துவரும் பிளாஸ்டிக் ஷீட்டுகள்தான், அவர்கள் வீட்டுக் கூரைகள். அவசரத்திற்கு ஒதுங்குவதற்கு கழிப்பறைகூட அத்துறைமுகத்தில் கிடையாது.

ஒரு கப்பலை உடைக்கும் பொழுது ஒரு தொழிலாளி மரணமடைவது நிச்சயம். கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்குள், குஜராத் - ஆலங் துறைமுகத்திலும், வங்காள தேசத்திலும் (கப்பலை உடைக்கும் பொழுது) 110 கூலித் தொழிலாளர்கள் பலியாகிவிட்டதாகச் சுற்றுப்புறச் சூழல் அமைப்புகள் அம்பலப்படுத்தியுள்ளன. கை - கால்களை இழந்து முடமாகிப் போனவர்களின் எண்ணிக்கை கணக்கிலேயே வராது.

கப்பலை உடைத்து எடுக்கப்படும் பழைய இரும்புக் கழிவுகளுக்குத் தரும் மதிப்பைக் கூட, இந்தத் தொழிலாளர்களுக்கு முதலாளிகள் தருவதில்லை. ஒரு சராசரித் தொழிலாகக் கூட அங்கீகரிக்க முடியாத இந்தக் கப்பல் உடைப்பை, ஒரு தொழிற்துறையாக அங்கீகாரம் அளித்திருக்கிறது, இந்திய ஆளும் கும்பல்.

இந்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம், ''பிரெஞ்சுக் கப்பலில் உள்ள கல்நார் கழிவுகளை சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் அகற்றும் தொழில்நுட்பம் ஆலங் துறைமுகத்தில் இருப்பதாகவும்; அனைத்தும் சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டே நடப்பதாகவும்'' அறிக்கை விட்டு, இந்தக் கப்பல் பேரத்தை நியாயப்படுத்தியிருக்கிறது.

ஏழை நாடான துருக்கி கூட, இந்த பிரெஞ்சு கழிவுக் கப்பலை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டது. ஆனால், ஏழை நாடுகளின் தலைவனாகவும், வருங்கால ''வல்லரசாகவும்'' தன்னைப் பீற்றிக் கொள்ளும் இந்திய ஆளும் கும்பலோ வலியப் போய், இந்த அபாயகரமான கழிவை தள்ளிக் கொண்டு வருகிறது. ஓரங்கட்டப்பட்ட கப்பல்கள் மட்டுமின்றி, மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் நுகர்ந்து தள்ளும் பிளாஸ்டிக் பொருள்கள், கணினி இயந்திரங்கள் தொடங்கி அணுக் கழிவுகள் வரை, எல்லாவிதமான கழிவுகளையும் அந்நியச் செலாவணிக்காக இறக்குமதி செய்து, இந்திய நாட்டின் நிலத்தையும், நீரையும், சுற்றுச்சூழலையும் நஞ்சாக்கி வருகிறது. 2020-இல் இந்தியா ''வல்லரசாக'' மாறப் போவதில்லை; மேற்குலகின் குப்பைத் தொட்டியாகத்தான் மாறப்போகிறது!

● ரஹீம்

www.padippakam.com

# ஒப்பந்த விவசாய மோசடி:
# பஞ்சாப் தரும் படிப்பினை

“கொடுமை, கொடுமை என்று கோயிலுக்குப் போனால், அங்கே ஏழு கொடுமை எதிரிலே வந்ததாம்!” - என்று ஒரு சொலவடை உண்டு. அந்தக் கதையாக, கடன் சுமையால் தத்தளிக்கும் விவசாயிகள் வேறுவழியின்றி ஒப்பந்த விவசாயம் செய்தால், அங்கேயும் வஞ்சிக்கப்பட்டு போண்டியாக்கப்பட்டு வருகிறார்கள்.

பஞ்சாபின் அமிர்தசரஸ் மாவட்டம், பாலியாபூரைச் சேர்ந்த பல்தேவ் சிங்கும் அக்கிராமத்தைச் சேர்ந்த 12 விவசாயிகளும் பன்னாட்டு குளிர்பான நிறுவனமான பெப்சியுடன் கடந்த ஆண்டில் பாசுமதி நெல் உற்பத்திக்கு ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள். ஒப்பந்தப்படி, பெப்சி நிறுவனம் வழங்கிய விதை நெல், உரம் - பூச்சி மருந்துகளைக் கொண்டு அந்நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி விவசாயம் செய்தார்கள். அறுவடையானதும், விளைச்சலைக் கொண்டு வந்தபோது, பெப்சி நிறுவனமோ ஒப்பந்தப்படி விலை கொடுக்க மறுத்து, அவற்றைத் தரமற்றது என்று கூறியது. பெப்சி கொடுத்த விதை நெல் மற்றும் இடுபொருட்களைக் கொண்டு பயிரிட்டும் கூட, விளைச்சலைத் தரமற்றது என்றால், அந்த விவசாயிகள் என்ன செய்ய முடியும்? ஒப்பந்தப்படி விளைந்த நெல்லை வெளிச்சந்தையிலும் விற்கக் கூடாது என்றால், அந்த விவசாயிகள் என்ன செய்ய முடியும்? வேறுவழியின்றி பெப்சி நிறுவனம் தீர்மானித்த அடிமாட்டு விலைக்கு அந்த நெல்லைக் கொடுத்துவிட்டு, அந்த விவசாயிகள் போண்டியாகிப் பரிதவிக்கிறார்கள்.

இதேபோல, கடந்த ஆண்டில் பெப்சியுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு உருளைக்கிழங்கு உற்பத்தி செய்த பாட்டியாலா மாவட்ட விவசாயிகள், டிராக்டர்களில் அவற்றை பெப்சி ஆலைக்குக் கொண்டு வந்தபோது, மூன்று நாட்கள் அவர்களைக் காத்திருக்கச் செய்து விட்டு, இக்கிழங்குகளில் இனிப்புத்தன்மை அதிகமாக உள்ளது என்று பெப்சி நிறுவனம் கொள்முதல் செய்ய மறுத்துவிட்டது. ஒப்பந்தப்படி கிலோ ரூ.4.50-க்கு வாங்கிக் கொள்வதாகக் கூறிய பெப்சி, தரமற்றது என்று பொய்க்குற்றச்சாட்டுடன் கொள்முதல் செய்ய மறுத்த இந்த உருளைக்கிழங்குகளை கிலோ ரூ. 1.00 வீதம் கொள்முதல் செய்து விவசாயிகளின் வயிற்றில் அடித்தது.

உணவு தானியக் கொள்முதலை அரசு கைகழுவி விட்டதாலும், உரம் - பூச்சி மருந்து முதலான இடுபொருட்களின் விலை உயர்வாலும், தாராளமயத்தால் அன்னிய இறக்குமதி காரணமாக விலை வீழ்ச்சியாலும் திவாலாகிப் போன விவசாயிகள் கடன் தொல்லை தாளாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; அல்லது அன்னிய - பெருமுதலாளித்துவ நிறுவனங்களுக்கு ஒப்பந்த முறையில் விவசாயம் செய்கிறார்கள். பஞ்சாபில், இத்தகைய ஒப்பந்த முறையிலான விவசாயம் படிப்படியாக விரிவடைந்து ஏறத்தாழ 3 லட்சம் ஏக்கர் அளவுக்கு வேர் விட்டுள்ளது. இந்த ஒப்பந்த விவசாயத்தில், இந்துஸ்தான் லீவர், கார்கில், மான்சாண்டோ, நெஸ்லே, பெப்சி, பி.ஹெச்.சி. முதலான பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும், டாடா, ரிலையன்ஸ், ஐ.டி.சி. மகேந்திரா, கோத்ரெஜ் முதலான தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களும் இறங்கியுள்ளன. விவசாய உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தும் புதிய திட்டம் என்று இந்த ஒப்பந்த விவசாயத்தை தீவிரமாகச் செயல்படுத்திவரும் ஆட்சியாளர்கள், இந்த ஒப்பந்த விவசாயத்துக்காக மானியங்களையும் சலுகைகளையும் வாரியிறைத்து வருகின்றனர். ஆனால், அந்தச் சலுகைகளையும் சுருட்டிக் கொண்டு ஒப்பந்த நிறுவனங்கள் விவசாயிகளை மோசடி செய்கின்றன.

உதாரணமாக, தொழில்நுட்பச் சேவை மற்றும் திறனுக்கான தொகை என்ற பெயரில் ஒப்பந்த நிறுவனங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 100 வீதம் மானியம் தரப்படுகிறது. ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கரில் பாசுமதி நெல் பயிரிடப்பட்டால், அரசாங்கம் ஒரு கோடி ரூபாயை இவ்வொப்பந்த நிறுவனங்களுக்கு தொழில்நுட்பச் சேவை என்ற பெயரில் அள்ளிக் கொடுக்கிறது. இத்தொகையை விவசாயிகளுக்கு அளித்து விட்டதாகக் கணக்குக் காட்டி இந்நிறுவனங்கள் ஏப்பம் விடுகின்றன. இதுதவிர, மண்டிக் கட்டணம், கிராமப்புற மேம்பாட்டு வரி, கொள்முதல் வரி முதலான எவையும் ஒப்பந்த விவசாய நிறுவனங்களுக்குக் கிடையாது. இவற்றையும் சுருட்டிக் கொள்ளும் இந்நிறுவனங்கள், ஒப்பந்தப்படி விவசாயிகளுக்கு விளைச்சலுக்கான தொகையைத் தராமல் ஏய்த்து வருகின்றன. இன்னொருபுறம் இந்நிறுவனங்களிடம் விதை வாங்கும்போதே, தொழில்நுட்பச் சேவை என்ற பெயரில் விவசாயிகளிடம் ஏக்கருக்கு இவ்வளவு என்று கட்டணம் வசூலிக்கின்றன. அரசாங்க மானியத்திலும் கொள்ளை, விவசாயிகளிடமும் பகற்கொள்ளை என்று இரண்டு வழிகளில் இந்நிறுவனங்கள் மோசடி செய்கின்றன.

இத்தனை மோசடிகளுக்கும் அரசு நிறுவனமான பஞ்சாப் உணவு தானியக் கழகம் உடந்தையாகவும் ஒப்பந்த விவசாயத்துக்கான முகமை நிறுவனமாகவும் செயல்படுகிறது. இந்நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்து கொண்ட பஞ்சாப் விவசாயிகள், இந்நிறுவனமும் மோசடி செய்வதைக் கண்டு குமுறுகிறார்கள். பஞ்சாபின் குர்தாஸ்பூர் மாவட்டம், கும்மான்கலான் கிராமத்தைச் சேர்ந்த குர்சரண் சிங் என்ற விவசாயி, பஞ்சாப் உணவு தானியக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்நிறுவனத்திடமிருந்து “ஹயோலா” எனப்படும் வீரிய ரக கடுகு விதையை வாங்கிப் பயிரிட்டார். ஒப்பந்தப்படி ஒரு குவிண்டால் கடுகை ரூ. 1,700


**குர்சரண் சிங், தனது கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளோடு, உணவு தானியக் கழகத்தின் ஒப்பந்தத்தைத் தீயிட்டுக் கொளுத்தும் அடையாளப் போராட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com




வீதம் வாங்கிக் கொள்வதாக இந்நிறுவனம் கூறியது. அதன்படி, விளைந்த கடுகை உணவு தானியக் கழகத்திடம் கொடுத்தபோது, அதில் ஈரப்பதம் அதிகம் உள்ளதாக இந்நிறுவனம் வாங்க மறுத்தது. குர்சரண் சிங் அவற்றை மீண்டும் நன்கு காயவைத்து கொண்டு சென்றார். அப்போதும் இந்நிறுவனம் ஈரப்பதம் அதிகமாக உள்ளதாக நிராகரித்தது. இப்படி மூன்று முறை அவர் அலைக்கழிக்கப்பட்டார். வெறுத்துப்போன குர்சரண் சிங், அக்கடுகை வெளிச்சந்தையில் குவிண்டால் ரூ. 1500 வீதம் விற்றுவிட்டு, உணவு தானியக் கழகத்தின் ஒப்பந்தத்தைத் தீயிட்டுக் கொளுத்தி தனது எதிர்ப்பைக் காட்டியுள்ளார். ''இது ஒரு மோசடி ஒப்பந்தம். என்னைப் போல் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். அரசாங்க நிறுவனமே இப்படி மோசடி செய்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று வேதனைப்படுகிறார் குர்சரண் சிங்.

பஞ்சாப் உணவு தானியக் கழகம் பொதுவில் உணவு தானியக் கொள்முதலை நிறுத்திவிட்டது. ஒப்பந்த விவசாயத்துக்கான முகமையாளர் என்ற முறையில், ஒப்பந்த விவசாயக் கொள்முதலையும் ஏதேனும் பொய்க் காரணங்களைக் கூறி நிராகரிக்கிறது. கடந்த ஆண்டில் பஞ்சாப் உணவு தானியக் கழகம் மூலம் 'ஹயோலா' எனப்படும் வீரிய ரக கடுகு விதை விற்கப்பட்டு, ஏறத்தாழ 4,400 ஏக்கரில் விவசாயிகள் கடுகு சாகுபடி செய்தனர். இதன் விளைச்சல், 36,000 குவிண்டாலுக்கு மேலாக இருந்தது. ஆனால், பஞ்சாப் உணவு தானியக் கழகம் 3,500 குவிண்டால் மட்டுமே கொள்முதல் செய்தது.

ஏதாவது ஒரு பொய்க் காரணத்தைக் கூறி இந்நிறுவனம் கொள்முதலை நிராகரித்ததால், விவசாயிகள் வெளிச்சந்தையில் அற்ப விலைக்கு விற்க நிர்பந்திக்கப்பட்டனர். இதனால், வெளிச்சந்தையில் உபரி அதிகமாகி மேலும் கடுகு விலை குறைந்தது. இந்நிலையில், பன்னாட்டுக் கம்பெனிகள் விலை மலிவான இத்தானியங்களைக் கொள்முதல் செய்து கொண்டு, பிறகு தமக்குள் கூட்டணி கட்டிக் கொண்டு இதே தானியங்களை அதிக விலைக்கு விற்று ஆதாயமடைகின்றன. ஒருபுறம் விவசாயிகளை மோசடி செய்து வெளிச்சந்தையில் விலை வீழ்ச்சியைத் தோற்றுவித்து கொழுத்த ஆதாயமடையும் இக்கம்பெனிகள், பின்னர் விலையேற்றம் செய்து மக்களையும் கொள்ளையடிக்கின்றன. ஆரவாரமாக அறிவிக்கப்பட்ட ஒப்பந்த விவசாயத்தால் பன்னாட்டுக் கம்பெனிகளும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களும்தான் கொழுக்கின்றன. விவசாயிகளோ மீண்டும் கடனாளியாகி போண்டியாகி நிற்கிறார்கள். பெருமையாகப் பீற்றிக் கொள்ளப்படும் ஒப்பந்த விவசாயத்தின் யோக்கியதை இதுதான்.

2004 இறுதியில் பஞ்சாப் விவசாயப் பல்கலைக் கழகம் மேற்கொண்ட ஆய்வின்படி, ஏறத்தாழ 70% ஒப்பந்த விவசாயிகள், இனி ஒப்பந்த முறையிலான விவசாயமே செய்யப் போவதில்லை என்றும், தாங்கள் மோசடி செய்யப்படுவதாகவும் கூறியுள்ளனர். ஒப்பந்த விவசாய நிறுவனங்களுக்கும் அதன் ஏஜெண்டாகச் செயல்படும் பஞ்சாப் உணவுக் கழகத்துக்கும் எதிராகப் போராட்டங்களை நடத்தப் போவதாக பாரதிய கிசான் சங்கம் எச்சரித்துள்ளது.



**ஆரவாரமாக அறிவிக்கப்பட்ட ஒப்பந்த விவசாயத்தால் பன்னாட்டுக் கம்பெனிகளும் தரகுப் பெரு முதலாளித்துவ நிறுவனங்களும்தான் கொழுக்கின்றன. விவசாயிகளோ மீண்டும் கடனாளியாகி போண்டியாகி நிற்கிறார்கள்.**

இருப்பினும், தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்கப் போவதாக அறிவித்துள்ள பாசிச ஜெயா அரசு தனது விவசாயக் கொள்கை அறிக்கையில், பருத்தி, மக்காச்சோளம், நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள், காட்டாமணக்கு, வெனிலா, இறைச்சிக் கோழி முதலானவற்றை ஒப்பந்த முறையில் உற்பத்தி செய்ய தாராள அனுமதியும், சலுகையும் அளித்துள்ளது. பஞ்சாப் வழியில் தமிழக விவசாயிகளும் போண்டியாக்கப் படுவதற்கான ஏற்பாடுதான் இது. அன்றைய காலனியாதிக்க ஆட்சியைப் போலவே, இன்றைய மறுகாலனியாதிக்கத்தின் கீழ் விவசாயம் நாசமாக்கப்பட்டு, ஏகாதிபத்தியங்களின் நலனுக்கேற்ப ஒப்பந்த விவசாயம் வேகமாகத் திணிக்கப்பட்டு வருகிறது. பஞ்சாப் தரும் படிப்பினைகளை உணர்ந்து நாடெங்குமுள்ள விவசாயிகள் ஒப்பந்த விவசாயத்துக்கும் மறுகாலனியாதிக்கத்துக்கும் எதிராகப் போராட அணிதிரள வேண்டியது அவசர அவசியமாகி விட்டது.

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# ஒரிசா:


# மறுகாலனியாதிக்கத்தின் கோரம் பழங்குடி மக்களின் யுத்தம்

கடந்த ஜனவரி 2-ஆம் தேதியன்று, தமது நிலங்களில் டாடா உருக்கு ஆலைக்கான சுற்றுச்சுவர் கட்டப்படுவதை எதிர்த்து திரண்டமைக்காக, ஒரிசா மாநிலத்தின் ஜஜ்பூர் மாவட்டத்திலுள்ள கலிங்கா நகர் பகுதியின் பழங்குடியினர் - 13 வயது சிறுவனும், மூன்று பெண்களும் உட்பட 12 பேர், போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ''இரண்டாவது ஜாலியன் வாலாபாக்'' எனத்தக்க வகையில், போராடிய மக்களை அரசு நிர்வாகமும், டாடா நிறுவனமும் திட்டமிட்டு படுகொலை செய்துள்ளன. கொலை வெறியாட்டத்தின் உச்ச கட்டமாய், காயம்பட்ட ஆறு பேரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, அவர்களுடைய கரங்களை வெட்டிப் பிணங்களாக திருப்பி அளித்திருக்கிறது, போலீசு. நாடு முழுவதும் அதிர்ச்சியை உண்டாக்கியுள்ள இச்சம்பவத்தின் விளைவாக, ஒரிசா பழங்குடியினர் மீதான எண்ணிலடங்கா ஒடுக்குமுறைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

பழங்குடியினர் மீதான அரசு - போலீசு வன்முறைக்கும், ஒடுக்குதலுக்கும் ஏராளமான சாட்சியங்கள் நவீன வரலாறு நெடுகப் படிந்துள்ளது. குறிப்பாக, பழங்குடியினரின் நிலங்களை ஏய்த்துப் பிடுங்குவதையும், அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுபவர்களைக் கொடூரமாக அடக்கிப் 'பாடம் புகட்டுவதையும்' ஆளும் வர்க்கம் தனது அதிகாரபூர்வக் கொள்கையாகவே கொண்டிருக்கிறது. மிகச் சமீபத்தில், கேரள மாநிலத்தில் தமது நில உரிமைகளுக்காகப் போராடிய வயநாடு மாவட்ட பழங்குடியினர் மீதும் இத்தகைய திட்டமிடப்பட்ட கொலைவெறித் தாக்குதல் ஏவி விடப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது. தமது நிலங்களையும், வாழ்க்கையையும் பறிகொடுத்த ஒரிசா பழங்குடி மக்கள் விழிப்புற்று, ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கும் மேலாக ஒன்று திரண்டு போராடி வரும் பின்னணியையும், ஆளும் வர்க்கத்தின் தொடர் அநீதிகளையும், அரசும், ஊடகங்களும் அங்கலாய்க்கும் அந்நிய முதலீட்டிற்கான விலை என்னவென்பதையும் அறிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது.

இரும்புத் தாது வளம் மிகுந்த 27 கிராம பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய கலிங்கா நகர் வட்டாரத்தில், ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மை மக்கள் வறிய பழங்குடியினங்களைச் சார்ந்தவர்கள். 'சுதந்திர'த்திற்குப் பின்னும் வாய்ப்பு வசதிகளற்று மக்கள் வாழும் இப்பகுதியில், இதுவரை ஒரே

**போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட பழங்குடியினரின் உடல்களை நெடுஞ்சாலையில் கிடத்தி, சாலை மறியலில் ஈடுபடும் ஒரிசா - கலிங்காநகர் பழங்குடியின மக்கள்.**





படிப்பகம்

ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடமும், மருத்துவமனையும்தான் கட்டப்பட்டுள்ளன. இப்பகுதியின் இரும்புத்தாது வளத்தை குறிவைத்த ஆளும் வர்க்கம், கலிங்காநகர் தொழிற்பேட்டையை தொடங்கத் திட்டமிட்டது. தொடக்கத்தில் சில பொதுத்துறை உருக்கு ஆலைகளும், பின்னர் புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில், அந்நிய நிறுவனங்களும் தொடங்கப்பட்டன.

இதனையொட்டி, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை, உரிய நிலக் கொள்முதல் தொகை, மறுவாழ்விடம், பள்ளி - மருத்துவ வசதிகள் உள்ளிட்ட உத்தரவாதங்களோடு, பழங்குடியினரின் நிலங்களை அரசு கையகப்படுத்தத் தொடங்கியது. 1997-இல் முதன்முதலில் இத்தொழிற்பேட்டையில் தொடங்கப்பட்ட நிலாச்சல் தொழிற்சாலை முதலாக, பல தொழிற்சாலைகளும் தொடங்கப்பட்டு, தாது வளங்களைத் தனியார் முதலாளிகள் அபகரிக்கத் தொடங்கினர்.

ஆனால், தனது வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்ட அரசு, அடிமாட்டுத் தொகையை வீசியெறிந்து மக்களை அப்புறப்படுத்தி வருகிறது. ஒரு ஏக்கருக்கு 37,000 ரூபாயை வழங்கிய அரசு, தொழில் தொடங்கிய தனியார் நிறுவனங்களிடம் ஏக்கர் ரூ.3.35 லட்சம் என விற்றுக் கொள்ளை இலாபம் அடித்தது. மேலும், 'பட்டா' உள்ளவர்களுக்கு மட்டுமே தொகை வழங்கப்படும் என 'சட்டம்' பேசியது.

1928-க்குப் பிறகு, ஒருபோதும் அரசு இப்பகுதியில் நிலத்தீர்வை செய்யாத நிலையில், அனுபோக உரிமையாக மட்டுமே தமது நிலங்களில் பயிரிட்டு வந்த பழங்குடியினர், அரசின் நயவஞ்சகத்திற்கு முன் செய்வதறியாது நின்றனர். இதிலுள்ள விநோதம் என்னவென்றால், இப்பழங்குடியினர் 'வாக்காளர்களாக'ப் பதிவு செய்யப்பட்டு இங்கு தேர்தல்கள் நடந்து வந்துள்ளன. இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துகள் உள்ளன. ஆனால், அப்பஞ்சாயத்து நிலங்கள் என்று கூட எதுவும் வரையறுக்கப்படவில்லை. இவ்வாறு அரசால் கழுத்தறுக்கப்பட்டு பழங்குடியினர் அப்புறப்படுத்தப்பட்ட வரலாறு துயரம் தோய்ந்த ஒன்றாகும்.

உதாரணமாக, நிலாச்சல் ஆலைக்காக மட்டும் அப்புறப்படுத்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 634. இக்குடும்பங்களுக்கு தங்கள் கிராமங்களிலிருந்து 12 கி.மீ. தொலைவில் துண்டு நிலம் அளிக்கப்பட்டது. அதைக் கொண்டு விவசாயம் செய்ய இயலாத நிலையில், குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று வாய்ப்பந்தலிட்ட அரசு, நிலம் கொடுத்த எவருக்கும் வேலை வழங்காத நிலையில், தமது நிலங்களையும், வாழ்விடங்களையும் இழந்து, இம்மக்கள் நிர்க்கதியாக கைவிடப்பட்டனர். பல குடும்பங்கள் பிழைப்பு தேடி வேறு இடங்களுக்கு ஓடின. ஒட்டுமொத்தத்தில் பழங்குடியினரில் பல நூறு குடும்பங்களின் வாழ்வு கேட்பாரற்று அழிந்தது. இது போன்று ஒரிசாவின் பல்வேறு மாவட்டங்களிலும், தனியார் மற்றும் அரசு உருக்கு ஆலைகளுக்காக, பழங்குடி மக்கள் தமது வாழ்விடங்களிலிருந்து பிடுங்கி எறியப்பட்டு, சொந்த மண்ணிலேயே அகதிகளாக விரட்டப்பட்டனர்.

இவ்வாறு கடந்த பத்தாண்டுகளாக ஆயிரக்கணக்கான பழங்குடியினர் அரசால் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டனர். இத்தகைய நிகழ்வுகளின் விளைவாக, கொதிப்புற்ற பழங்குடி மக்கள் அரசின் நிலக் கையகப்படுத்துதலுக்கு எதிராகவும், இழந்த நிலங்களுக்கு உரிய இழப்பீடு கோரியும், மறுவாழ்வு வாய்ப்புகளுக்காகவும்,' தமக்கான அமைப்புகளை உருவாக்கி, போராடத் தொடங்கினர்.

கடந்த மே 9-ஆம் தேதியன்று ''மகாராஷ்டிரா சீம்லெஸ்'' எனும் உருக்கு ஆலைக்கான 'பூமி பூஜை'யின் போது பழங்குடி மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், மாநில நிதி அமைச்சர் பிரபுல்லா கதே 'முன்னிலையில்' போலீசு காட்டுமிராண்டித்தனமாக தடியடி நடத்தியது. இரவு நேரத்தில் பழங்குடியினர் குடியிருப்புகளில் 'தேடுதல் வேட்டை' நடத்தியது. 25 பெண்கள், 14 குழந்தைகள் உட்பட பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மனித உரிமை ஆணையம் கூக்குரல் எழுப்பியும் அரசு அசைந்து கொடுக்கவில்லை.

இந்நிலையில், கலிங்கா நகர் தொழிற்பேட்டை என்று அரசு வரையறுத்த நிலங்களின் அடிப்படையில், டாடா நிறுவனத்தின் உருக்கு ஆலைக்காக மட்டும் 2,000 ஏக்கர் பரப்பளவில் 9 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. இவ்வாறு அப்புறப்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட மக்களுக்கான மறுவாழ்விடங்களோ, வேலை உத்திரவாதங்களோ கூட அறிவிக்கப்படவில்லை. கடந்த அக்டோபரிலேயே ஆலை கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு ஆலை சுற்றுச்சுவர் கட்ட முயற்சிக்கப்பட்டது. மக்கள் உறுதியோடு எதிர்த்துப் போராடத் தொடங்கியதன் விளைவாக, சுற்றுச்சுவர் எழுப்பும் முயற்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் மெதுவாக நடந்தேறத் தொடங்கியது. இதனையொட்டி மக்கள் மிகப்பெரிய அளவில் அணிதிரண்டு போராட ஆயத்தமாகி வருவதை உணர்ந்த டாடா நிறுவனமும் அரசும் ஆலையைக் கட்டியே தீருவதென முடிவெடுத்தன.

ஜனவரி 2-ஆம் தேதியன்று, ஆயுதமேந்திய 300 போலீசாரடங்கிய 6 படையணிகள் களமிறக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர், போலீசு உயர் அதிகாரிகள் தலைமையில், ஆலை சுற்றுச்சுவர் கட்டுமானம் தொடங்கப்பட்டது. இதனை அறிந்த பழங்குடியினர் அங்கே அணிதிரண்டனர். தமது எதிர்ப்பை தெரிவிக்கவும் அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தவும், தம்மில் நால்வரைத் தேர்ந்தெடுத்து அனுப்பினர். நால்வரும் சுற்றுச்சுவருக்காகத் தோண்டப்பட்டிருந்த குழியை நெருங்கியவுடன், யாரும் எதிர்பாராத வகையில் குழியில் பதிக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் போலீசாரால் வெடிக்கப்பட்டன. அதிர்ச்சியில் நால்வரும் அக்குழியில் விழ, சரமாரியாக கண்ணீர்ப் புகைக் குண்டுகளும், ரப்பர் தோட்டாக்களும் மக்களைத் தாக்கின. வெகுண்டெழுந்த மக்கள், கற்களால் போலீசைத் திருப்பித் தாக்கத் தொடங்கினர். மோதலில் ஒரு போலீசு மக்களால் கொல்லப்பட்டான். உடனடியாக, மக்கள் மீது ஈவிரக்கமற்ற - மூர்க்கத்தனமான துப்பாக்கிச் சூடு கட்டவிழ்த்து விடப்பட்டது. வெறித்தனமாக ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில், நிராயுதபாணியான மக்கள் பிணங்களாகச் சரிந்து விழுந்தனர். பதறி ஓடிய மக்களை விரட்டி விரட்டி சுட்ட போலீசு, காயம்பட்டவர்களை இரத்தம் சொட்டச் சொட்ட இழுத்துச் சென்றது.

மாவட்டம் முழுவதும் பதற்றம் தொற்ற, ஆவேசமுற்ற மக்கள் கலிங்கா நகர் வட்டாரத்தின் அனைத்து நெடுஞ்சாலைகளையும் மறித்தனர். வயலில் இறைந்து கிடந்த நான்கு பிணங்களையும் சாலையின் நடுவில் வைத்து, தொடர் சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். டாடா உருக்கு ஆலை கட்டுமானப் பணிகளை ஒட்டுமொத்தமாக நிறுத்தவும், இறந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கவும், இதுவரை தாம் இழந்த நிலங்களுக்கெல்லாம் நட்டஈடு வழங்கவுமாய் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரலாறு காணாத வகையில் இரவு பகலாக சாலை மறியல் போராட்டம் தொடர்ந்தது. மாவட்டத்தின்

www.padippakam.com

அனைத்துப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது. போலீசு, அரசு அதிகாரிகள் எவரும் போராட்டப் பகுதிகளுக்குள் நுழைய முடியவில்லை.

இந்நிலையில் ஜனவரி 4-ஆம் தேதியன்று, காயம்பட்டு மருத்துவமனையில் போலீசாரால் சேர்க்கப்பட்டவர்கள் பிணங்களாக ஒப்படைக்கப்பட்டார்கள். அவற்றுள் ஐவரின் உடல்களில் கரங்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. அவர்கள் துப்பாக்கிச் சூட்டில் இறக்கவில்லை, போலீசாரால் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்த மக்கள் கொதித்தெழுந்தனர். ஆனால், கைரேகைகளுக்காகவே கரங்கள் வெட்டப்பட்டதாக பச்சையாகப் புளுகியது போலீசு. முன்னாள் போலீசு அதிகாரிகளே இப்பொய்யை ஏற்க மறுக்கின்றனர். 12 பிணங்களோடும் போராட்டம் ஆவேசத்தோடு தொடர்ந்தது. பின்னர், சில சமூக இயக்கங்களின் தலைவர்களின் ஆலோசனையின் பேரில், அன்று மதியம் அவ்வுடல்கள் எரியூட்டப்பட்டன.

அன்று முதல் பழங்குடியினரின் போராட்டம் தீர்மானகரமான கட்டத்தை நோக்கித் திரும்பியுள்ளது. கலிங்காநகர் மட்டுமின்றி, ஆங்குல், கோரபுட், சுந்தர்கர், ஜகத்சிங்பூர், பாரதீப் ஆகிய இடங்களிலும் பழங்குடி மக்களின் போராட்டங்கள் வெடித்தன. இன்றளவும் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

அரசும், தொழில் முதலைகளும் எதிர்பார்த்ததற்கு மாறாக, கொலைவெறியாட்டத்திற்குப் பிறகு, நசுக்கப்பட்ட மக்கள் அஞ்சி ஒடுங்குவதற்குப் பதிலாக, ஆர்ப்பரித்து எழுந்துள்ளதைக் கண்டு ஆளும் வர்க்கம் அச்சத்தில் உறைந்து போயுள்ளது. வழக்கம் போல் விசாரணைக் கமிசன், நீதி விசாரணை, மாவட்ட ஆட்சியர் - போலீசு உயர் அதிகாரிகள் தற்காலிக பணிநீக்கம், இழப்பீடு என நவீன் பட்நாயக் அரசு நாடகமாடியதை மக்கள் ஒதுக்கிப் புறந்தள்ளி விட்டனர்.

பழங்குடியினரின் போர்க்குணமிக்க எழுச்சியால் கிலி கண்டு போயுள்ள அரசு, தற்போது பழங்குடியினர் மறுவாழ்வுக்கான நிவாரணங்களை 'ஆய்வு' செய்ய அமைச்சர்கள் குழு ஒன்றை அமைத்துள்ளது. இந்தியாவிலேயே அதிகமான அந்நிய முதலீடாக 51,000 கோடி ரூபாய் முதலீடு செய்யப் போவதாக அறிவித்துள்ள ''போஸ்கோ'' நிறுவனம் தனது உருக்காலையைத் தொடங்குவதற்கு ஐயம் தெரிவித்துள்ளது. கலிங்கா நகரில் 16,000 கோடி முதலீட்டில் ஆலை தொடங்கத் திட்டமிட்டிருந்த ''டிஸ்கோ'' நிறுவனம் தனது நிர்மாணப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது.

சோனியா காந்தி நேரில் சென்று ஆறுதல் சொல்லியும், ஒரிசாவை ஆளும் நவீன் பட்நாயக் அரசை காங்கிரசு மற்றும் இடதுசாரிகள் கண்டித்தும், ஆளும் கூட்டணியிலுள்ள பா.ஜ.க. அமைச்சர்களே அரசை எதிர்க்கவுமாய் ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகள் இச்சம்பவத்தைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேட முயன்று வருகின்றன.

ஆனால், இவற்றையெல்லாம் மீறி பழங்குடியினரை ஒருங்கிணைக்கும் 'விஸ்தாபன் விரோதி மன்ச்' என்ற அமைப்பின் தலைமையில் போராட்டத் தீ, ஒரிய மாநிலமெங்கும் பற்றிப் படர்ந்து வருகிறது. இவ்வமைப்பின் தலைவர் ரபீந்திர ஜரகா கடந்த அக்டோபர் முதலாக பொய்க் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். போராட்டத்தைத் தொடரும் மக்கள், கடந்த காலங்களில் போலீசு படைகளின் அடக்குமுறைகளை நினைவில் கொண்டு, மாவட்டத்தின் அனைத்துப் போக்குவரத்தையும் துண்டித்துள்ளனர். இரு சக்கர வாகனங்கள் மட்டுமே நுழையும் வண்ணம் பாதைகள் விட்டு வைக்கப்பட்டுள்ளது. 'வளர்ச்சி' என்ற பெயரில் மக்களின் இரத்தத்தில் அதிகார வர்க்கமும், முதலாளிகளும் எழுப்ப முயலும் மாளிகையின் அஸ்திவாரத்தை அசைத்து, உறுதியான அடி எடுத்து வைத்திருக்கிறார்கள் ஒரிய பழங்குடி மக்கள்.



பழங்குடியின மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி, மாநிலம் தழுவிய அளவில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தத்தின் பொழுது, புவனேசுவர் நகரில் தமது மரபுவழி ஆயுதங்களோடு போராட்டத்தை நடத்தும் பழங்குடியின மக்கள்.

ஈவிரக்கமின்றி 'தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம்' என்ற பெயரில் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு அரசு தரும் பதில், குரல்வளை நெறிக்கும் அடக்குமுறையாகவே உள்ளது. ஹோண்டா தொழிலாளர்கள் மீதும், ஒரியப் பழங்குடியினர் மீதும் நிகழ்த்தப்பட்ட வன்முறை அறிவிப்பது இதுதான். உரிமைகளின் பெயரால் போராட முற்பட்டால், அந்நிய முதலீட்டுக்கு கடுகளவேனும் இன்னல் விளைந்தால், வேட்டை நாய்கள் அவிழ்த்து விடப்படும். இத்தகைய சவாலுக்கு முன்பாக, நாடெங்கிலுமுள்ள புரட்சிகர, ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் இப்போராட்டத்திற்கான ஆதரவை தெரிவிப்பதும், தமது போராட்டங்களை கூர்மைப்படுத்தி விரைவதும்தான், ஒரிய மக்களின் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்வதற்கும், நிரந்தர விடுதலைக்கும் வழிவகுக்கும்.

● பால்ராஜ்

www.padippakam.com

# விமான நிலைய ஊழியர் போராட்டம் போலி கம்யூனிஸ்டுகளின் துரோகம்



மறுகாலனியத் தாக்குதல் மூர்க்கமாக அரங்கேறி வருகிறது. அரசுத் துறைகளைத் தாரை வார்ப்பதற்கு கூறப்பட்ட பொய்க் காரணங்கள் கூட இல்லாமல், இப்போது லாபமீட்டும் அரசுத் துறை நிறுவனங்களான விமான நிலைய ஆணையகத்தின் கீழுள்ள தில்லி, மும்பை விமான நிலையங்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளன. இக்கொடுமைக்கெதிராகப் போராடும் விமான நிலைய ஊழியர்கள் மீது மும்பை போலீசு காட்டுமிராண்டித்தனமான தடியடித் தாக்குதலை நடத்தியுள்ளது. விமான நிலையங்கள் விமானப்படையைக் கொண்டு இயக்கப்படுகின்றன. முன்னணியாளர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அத்தியாவசியப் பணித்துறை சட்டம் பாயும் என்று எச்சரிக்கிறது அரசு. இந்த அச்சுறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் மீறி விமான நிலைய ஊழியர்களின் போராட்டம் உறுதியுடன் தொடர்கிறது.

இந்தியாவில் மொத்தமுள்ள 126 விமான நிலையங்களில் லாபகரமாகச் செயல்படுபவை தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா முதலான ஒருசில விமான நிலையங்கள் மட்டும்தான். இவற்றின் வருவாய் மூலம்தான் மற்ற விமான நிலையங்கள் செயல்படுகின்றன. மொத்த வருவாயில் 65% அளவுக்கு ஈட்டித் தருபவை தில்லி, மும்பை ஆகிய இரு விமான நிலையங்கள்தான். இவை தனியார்மயமாக்கப்பட்டதன் விளைவாக, மீதி 35% வருவாயைக் கொண்டு இயங்க முடியாமல் இதர விமான நிலையங்கள் நட்டப்பட்டு, பின்னர் அவையும் தனியார்மயமாக்கப்படும். அடுத்த குறி சென்னையும் கொல்கத்தாவும்தான் என்பது நிச்சயமாகி விட்டது.

தில்லி, மும்பை விமான நிலையங்களைக் கைப்பற்றுவதற்கான அந்நிய - தரகு முதலாளிகளின் போட்டா போட்டியில், ஒப்பந்தப் புள்ளிகளைப் பரிசீலிப்பதிலும் தேர்வு செய்வதிலும் மோசடிகள் - முறைகேடுகள் நடந்து, தாங்கள் போட்டியிலிருந்து கழித்துக் கட்டப்பட்டுள்ளோம் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறது, அனில் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம். அந்நிய முதலீடு இல்லாத - அரசும் தனியாரும் கொண்ட கூட்டுப்பங்கு நிறுவனமாகக் கொண்டு விமான நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று விமான நிலைய ஊழியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட மாற்றுத் திட்டத்தை விமானப் போக்குவரத்து அமைச்சகம் எவ்வித விளக்கமும் தராமல் நிராகரித்துள்ளது. தனியார்மயமாக்கும் முடிவை எதிர்த்து கடந்த செப்டம்பரில் விமான நிலைய அதிகாரிகள் சங்கம், தில்லி உயர் நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கு தடாலடியாகத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதேசமயம், 'அவசரமாகக் கூடிய மத்திய அமைச்சரவைக் கூட்டம் இத்தனியார்மயமாக்கலுக்கு ஒப்புதல் அளித்து அங்கீகரித்துள்ளது.

ஊழியர் சங்கத்தின் மாற்றுத் திட்டத்துக்கு பதிலளிக்கவில்லை, ஒப்பந்தப்புள்ளிகள் விதிப்படி முறையாகப் பரிசீலிக்கப்படவில்லை, லாபமீட்டும் அரசுத் துறையை தனியாருக்குத் தாரை வார்க்க வேண்டிய அவசியம் பற்றி விளக்கமில்லை, ஊழியர்களுக்கு வேலை உத்தரவாதமில்லை என்றெல்லாம் புலம்புகிறார்கள், விமான நிலைய ஊழியர் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் போலி கம்யூனிஸ்டுகள். ஆம்; எதுவும் இல்லைதான்! உலக வர்த்தகக் கழகத்தின் உத்தரவுகளைச் செயல்படுத்துவதுதான் ஒரே முடிவு என்று தனது அடுத்தடுத்த தாக்குதல்கள் மூலம் மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறது, கைக்கூலி காங்கிரசு அரசு. மனித முகத்துடன் கூடிய தனியார்மயம் எனும் அதன் பித்தலாட்ட முகமூடி கிழிந்து கந்தலாகி நிற்கிறது. இத்தனைக்கும் பிறகும் இந்தக் கைக்கூலி அரசை போலி கம்யூனிஸ்டுகள் முட்டுக் கொடுத்து ஆதரித்துக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டை மீண்டும் காலனியாக்கும் இத்தாக்குதலை எதிர்த்துப் போராடுவதை விட்டு, போராடும் ஊழியர்களுடன் மைய அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்; ஊழியர் சங்கம் முன்வைத்துள்ள மாற்றுத் திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என்று இத்தேசத் துரோக கும்பலிடம் காவடி தூக்குகின்றனர் போலி கம்யூனிஸ்டுகள். ஆயிரக்கணக்கான ஊழியர்களின் எதிர்கால வாழ்வு பறிக்கப்பட்டுள்ளதைப் பற்றி அக்கறை காட்டாத மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர், ஊழியர் போராட்டத்தால் கொல்கத்தா விமான நிலையத்தில் பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். அம்மாநில அரசோ, போராடும் ஊழியர்களைச் சமரசப்படுத்தி இடையூறு ஏற்படுத்தாமல் போராடச் சொல்கிறது.

இத்துரோகிகள்தான் விமான நிலைய ஊழியர் போராட்டத்துக்கும் தலைமை தாங்குகிறார்கள். இத்துரோகத் தலைமையைத் தூக்கியெறியாமல் விமான நிலைய ஊழியர்கள் தமது போராட்டத்தில் ஒரு அடிகூட முன்னேற முடியாது. பரந்துபட்ட மக்களுடன் ஐக்கியப்பட்டு மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராடாமல் தனியார்மயமாக்கலை வீழ்த்தவும் முடியாது.

● வசந்தன்



படிப்பகம்

www.padippakam.com

# சில்லறை வணிகத்தில் பன்னாட்டு மூலதனம்:

# பேரழிவுக்கு ஒரு முன்னோட்டம்

சில்லறை வணிகத்தில் 51 சதவீதம் அந்நிய முதலீடு அனுமதிக்கப்படும் என்ற அறிவிப்பை ஜனவரி 25-ஆம் தேதியன்று காங்கிரசு அரசு வெளியிட்டுள்ளது. மதுபானம், பெட்ரோலிய கட்டுமானம், தானியக் கிட்டங்கிகள், பருத்தி-ரப்பர் வணிகம், வைரம் உள்ளிட்ட கனிமச் சுரங்கங்கள், தொழில்துறைக்கான வெடி மருந்துகள், விமான நிலையங்கள், மின்சாரத்தை வாங்கி விற்கும் வணிகம் போன்றவற்றில் இனி 100 சதவீத அந்நிய முதலீடு அனுமதிக்கப்படுவதாகவும் இந்த அறிவிப்பு கூறுகிறது. பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஒவ்வொரு துறையாக விற்பதை விட சுனாமியைப் போல கொத்துக் கொத்தாக அள்ளிச் செல்ல ஏற்பாடு செய்வதுதான் மக்களைத் திக்குமுக்காடச் செய்யவும், செயலிழக்கச் செய்யவும் வழி என்று காங்கிரசு கயவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

''சில்லறை வணிகம் குறித்து நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் போதே தன்னிச்சையாக இப்படியொரு அறிவிப்பை வெளியிட உங்களைத் தூண்டியது எது?'' - என்று ஜனவரி 31-ஆம் தேதி பிரதமரிடம் நேரில் கேள்வி எழுப்பியிருக்கிறார் 'மார்க்சிஸ்டு' கட்சித் தலைவர் பிரகாஷ் காரத் (இந்து, பிப்.1). ''டாவோஸ் மாநாட்டில் பன்னாட்டு முதலாளிகளை மகிழ்விக்கத்தான் இந்த அவசர அறிவிப்பு'' என்று காரத்தின் கேள்விக்கு 26-ஆம் தேதியே பதிலளித்துவிட்டார் யெச்சூரி. எனவே, இனி குறைந்த பட்ச செயல் திட்டம் குறித்து 'மார்க்சிஸ்டு'கள் மன்மோகனிடம் விவாதிப்பதைவிட நேரடியாகப் பன்னாட்டு முதலாளிகளிடமே விவாதித்து விடலாம்.

கூட்டணிக்குள் விவாதம், தேசிய விவாதம் என்ற பேச்சுகள் எல்லாமே முழு மோசடிகள். ''முதலீடு போட பணமில்லை, தொழில்நுட்பம் இல்லை'' என்று மற்ற துறைகளை தாரை வார்ப்பதற்குக் கூறப்படும் வாதங்களையும் நொண்டிச் சாக்குகளையும் கூட இதற்குச் சொல்ல முடியாது. சில்லறை வணிகத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழையவிருப்பது பற்றி செப். 2005 புதிய ஜனநாயகத்தில் எழுதியிருக்கிறோம்.

ஆண்டொன்றுக்கு இந்தியாவில் நடைபெறும் சில்லறை வணிகத்தின் மதிப்பு சுமார் 11 லட்சம் கோடி ரூபாய். இது 2010-ஆம் ஆண்டில் 13.5 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்பது பன்னாட்டு நிறுவனங்களின் கணிப்பு. 2005-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்த விற்பனையில் 94% சதவீதம், சிறு வணிகர்களின் கையில் இருக்கிறது. அரசுக் கணக்கெடுப்பின்படியே சுமார் 4.3 கோடிப் பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிக்கிறார்கள். அவர்களைச் சார்ந்து இருக்கும் குடும்பங்களையும் சேர்த்து கணக்கிட்டால் சுமார் 20 கோடிப் பேருக்கு சிறு வணிகம்தான் சோறு போடுகிறது. விவசாயத்திற்கு அடுத்தபடி மிக அதிகமான மக்கள் சார்ந்திருக்கும் தொழில் சிறு வணிகம். விவசாயத்தின் அழிவு, வேலையின்மை, ஆட்குறைப்பு, ஆளெடுப்புத் தடை, சிறு தொழில்களின் அழிவு ஆகிய இவையனைத்தும், மேலும் மேலும் அதிகமான மக்களை இந்தத் தொழிலை நோக்கித் தள்ளிவருகின்றன. 20 கோடி மக்கள் ஈட்டி வரும் வருமானத்தை 10, 20 முதலாளிகள் மட்டுமே அபகரித்துக் கொள்வதற்கான சதித்திட்டம்தான் சில்லறை விற்பனையில் பன்னாட்டு நிறுவனங்களின் ஆக்கிரமிப்பு!

**அதிநவீன பல்பொருள் அங்காடி: 20 கோடி மக்கள் ஈட்டி வரும் வருமானத்தை அபகரித்துக் கொள்வதற்கான பன்னாட்டு நிறுவனங்களின் ஆக்கிரமிப்பு.**




கொள்ளை லாபமடிப்பதற்கான தங்களுடைய பேய்ப்பசியை பன்னாட்டு முதலாளிகளும் அவர்களது கூட்டாளிகளான இந்தியத் தரகு முதலாளிகளும் கடுகளவும் மறைத்துக் கொள்ளவில்லை. உலகின் வளர்ந்து வரும் 30 சந்தைகளில் இந்தியாதான் முதலிடத்தில் இருக்கிறது என்று சப்புக் கொட்டுகிறார்கள். ''மளிகைக் கடைக்காரர்களையும் சிறு வணிகர்களையும் பாதுகாக்கும் சட்டங்களை இனிமேலும் சகித்துக் கொள்ள முடியாது'' என்று எச்சரிக்கிறார் ''அசோசெம்'' என்ற இந்தியத்



படிப்பகம்

தரகு முதலாளிகள் சங்கத் தலைவர் அனில் அகர்வால். ''அரசின் இந்த முடிவை வர வேற்கிறோம். சீக்கிரமே உணவு தானிய சில்லறை விற் பனை திறந்து விடப்பட இருப்பதால், எல்லா சில் லறை வணிகத்திலும் 100% அந்நிய முதலீட்டை அரசு அனுமதித்துத்தான் ஆக வேண்டும்'' என்கிறார் எஃப்.ஐ.சி.சி.ஐ எனும் மற்று மொரு தரகு முதலாளிகள் சங் கத் தலைவர் போதார்.

அமெரிக்க வால் மார்ட் நிறுவனத்தின் தலைவர் சென்ற ஆண்டே மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசிய தும், சென்ற மாதம் மலேசியா வில் நடந்த பன்னாட்டு முத லாளிகள் மாநாட்டில் ''சில் லறை வணிகத்தைத் திறந்து விட்டே தீருவோம், இடது சாரிகளின் எதிர்ப்புகளை யெல்லாம் சமாளித்து விடு வோம்'' என்று மன்மோகன் பேசியதும் பழைய கதைகள். சில்லறை வணிகத்தையும் பென்சன் நிதியையும் பன்னாட்டு நிறுவனங்க ளுக்குத் திறந்து விட்டால்தான், நம் நாட்டுக் கணினி வல்லுநர்களுக்கு அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வேலை கொடுப்பார்கள் என்பதை இட துசாரிகளுக்குப் புரிய வைக்கப் போகி றாராம் சிதம்பரம் (எகனாமிக் டைம்ஸ், ஜன. 23). இது புதிய செய்தி. சொந்த மாக முதல் போட்டுத் தொழில் நடத் தும் 4 கோடி சிறு வணிகர்களையும், 2 கோடி தொழிலாளர்கள் உழைத்து சம் பாதித்த ஓய்வுக்கால நிதியையும் பன் னாட்டு நிறுவனங்களுக்குக் காவு கொடுத்தால்தான் நம் நாட்டு இளைஞர் களுக்கு வேலை கேட்டு அமெரிக்காவி டம் பிச்சை எடுக்க முடியுமாம்! கேட்ட மாத்திரத்தில் செருப்பால் அடிக்கத் தோன்றும் சிதம்பரத்தின் சிந்தனையை விஞ்சுகிறார் உணவு பதப்படுத்தும் துறைக்கான மத்திய அமைச்சர் சுபோத் காந்த் சகாய். ''சில்லறை வணிகத்தில் 100% பன்னாட்டு கம்பெனிகளை அனுமதித்தால்தான், தாங்கள் ,விற் பனை செய்யும் உணவுப் பொருட்க ளைத் தாங்களே உற்பத்தி செய்யும் பொருட்டு அவர்கள் விவசாயத்திலும் ஈடுபடுவார்கள்; அப்போதுதான் நம் நாட்டு விவசாயிகளுக்கு நிறைய வேலை வாய்ப்பு கிடைக்கும்'' என்று விவசாயத்திற்கும் சேர்த்துக் கொள்ளி வைக்க வழி சொல்கிறார்.



**விவசாயம் மற்றும் சிறுதொழில் உற்பத்தியை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அழிக்கத் துடிக்கும் பிரம்மாண்டமான ''ஷாப்பிங் மால்''.**

''வெறும் 51% மட்டும்தான் அந் நிய மூலதனத்தை அனுமதிக்கிறோம்; அதுவும் தமது சொந்த பிராண்டுகளை (Brand) மட்டுமே பன்னாட்டு நிறுவ னங்கள் விற்பனை செய்ய முடியும்'' என்று தன்னைச் சந்தித்த போலி கம்யூ னிஸ்டு தலைவர்களிடம் சமாதானம் சொல்லியிருக்கிறார் மன்மோகன். போராடுவோம் என்று ஒருபுறம் சவ டால் அடித்துக் கொண்டே, ''அறிவிப் பின் உள் விவரங்களை அரசு சரியாகத் தெளிவுபடுத்தவில்லை'' என்று சந்தில் புகுந்து ஜகா வாங்குகிறார்கள், 'மார்க் சிஸ்டு'கள்.

வர்த்தக அமைச்சர் கமல்நாத், அர சின் கொள்கையை 'மார்க்சிஸ்டு'களுக் குத் தெளிவுபடுத்துகிறார். ''51% அந் நிய நேரடி முதலீட்டை (FDI) அனுமதித் திருக்கிறோம்; மீதி 49 சதவீதத்தை அந் நிய நிதி நிறுவனங்கள் (FII) வாங்க லாமா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை; 100 சதவீதமும் அனு மதிக்கலாம் என்பதே என் கருத்து'' என்று டாவோஸ் மாநாட்டில் பன் னாட்டு முதலாளிகளுக்கு விளக்கம் சொல்லியிருக்கிறார். ''வலது காலை 51% உள்ளே வைக்கலாம், இடது காலை 49% வைக்க அனுமதிக்கலாமா என்பது பற்றி இன்னும் முடிவு செய்ய வில்லை'' என்று கூறுவதன் பொருளை மரமண்டைகள் கூட விளங்கிக் கொள்ள முடியும்; 'மார்க்சிஸ்டு'களுக் குத்தான் பாவம், விளங்க வில்லை.

உண்மையில் 51% என்ற அறிவிப்பே ஒரு முழு மோசடி. ஏற்கெனவே பல பன்னாட்டு நிறுவனங்கள் தமது பினாமி முகவர்கள் (Franchisee) மூலம் 100% தமக்குச் சொந்தமான கடைக ளையே வைத்திருக்கிறார் கள். பாட்டா, அடிடாஸ், சோனி, நோக்கியா போன்ற ஒரு பிராண்டு விற்கும் கடை கள் மட்டுமின்றி, பல்பொ ருள் அங்காடிகளையும் பன் னாட்டு நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. ''ஜெர்மனியின் மெட்ரோ சில்லறை வணிக நிறுவனம், கொல்கத்தாவில் தனது சங்கிலித் தொடர் உண வகங்களைத் திறக்க இருக்கி றது என்பதைப் பெருமையு டன் அறிவிக்கிறோம்'' என்று நவ. 28-ஆம் தேதியன்றே பேட்டி கொடுத்திருக்கிறார் மே.வங்க போலி கம்யூ னிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாசார்யா (பைனான்சியல் எக்ஸ் பிரஸ், 29.11.05). ஆகவே, இதுநாள் வரை கொல்லைப்புறம் வழியாக கள்ளத்தனமாக நுழைந்து வந்த பன் னாட்டுக் கம்பெனிகளை, தற்போதைய அறிவிப்பின் மூலம் வாயிற்கதவைத் திறந்து வரவேற்றிருக்கிறார் மன் மோகன் சிங் என்பதே உண்மை.

இதனை இன்னொரு எளிய உதார ணம் மூலமும் புரியவைக்க முடியும். பிரபல சங்கிலித் தொடர் அங்காடி யான ஃபுட் வேர்ல்ட், ஆர்.பி.ஜி என்ற இந்தியத் தரகு முதலாளிய நிறுவன மும் டயரி ஃபார்ம் என்ற ஜெர்மன் பன்னாட்டு நிறுவனமும் இணைந்து நடத்தும் கடையாகும். தற்போது இரு வரும் பிரிந்துவிட்டபடியால், ஆர்.பி.ஜி தனது கடைகளை ''ஸ்பென் சர் டெய்லி'' என்ற பெயரிலும், டயரி ஃபார்ம் தனது கடைகளை ''ஃபுட் வேர்ல்ட்'' என்ற பெயரிலும் நடத்தி வருகின்றன. இப்படியொரு பன் னாட்டு நிறுவனக் கூட்டு இருப்பதே இந்தப் பிரிவுக்குப் பிறகுதான் தெரிய வருகிறது. ஆகவே 51% மட்டுமே அந் நியக் கூட்டு என்பதும் சரி, ஒரு பிராண்டு பொருளை மட்டுமே விற்க லாமென்பதும் சரி, சிறு வணிகத்தைக் காப்பாற்றும் பொருட்டு விதிக்கப்பட் டுள்ள கட்டுப்பாடுகள் அல்ல; அவர்க ளுடைய எதிர்ப்பை மழுங்கச் செய்வ

www.padippakam.com

தற்காகவே செய்யப்பட்டுள்ள ஏமாற்றுகள்.

ஒரு பிராண்டு மட்டுமே விற்கலாமென்ற 'கட்டுப்பாட்டிற்கு' சட்டரீதியான விளக்கம் இன்னும் தயாரிக்கப்படவில்லை என்கிறார் கமல்நாத். பன்னாட்டு நிறுவனங்களுக்கு வசதியான முறையில் அவர்களைக் கலந்தாலோசித்து இந்த விளக்கம் தயாரிக்கப்படும். சொல்லப் போனால் இந்த 'ஒரு பிராண்டு' என்ற ஏற்பாடு உலகின் மிகப்பெரிய சில்லறை வணிக நிறுவனமான அமெரிக்காவின் ''வால் மார்ட்''டுக்குத்தான் பெரிதும் பயனளிக்கக்கூடியது. திருப்பூரில் தயாரித்து அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் பனியன்கள் முதல் சீனாவிலிருந்து தயாரித்தனுப்பப்படும் டி.வி. பெட்டிகள் வரை அனைத்துமே ''வால் மார்ட்'' என்ற பிராண்டு அச்சிடப்பட்டுத்தான் அனுப்பப்படுகின்றன. சொந்தத் தொழிற்சாலையோ, உற்பத்தியோ இல்லாமல், விவசாயிகளிடமிருந்தும் சிறு உற்பத்தியாளர்களிடமிருந்தும் அடிமாட்டு விலைக்கு பொருட்களை வாங்கி, அவற்றின் மீது தன்னுடைய பெயரைப் பொறித்துக் கொள்ளும் வேலையைத்தான் ''வால் மார்ட்'' உலகெங்கும் செய்து வருகிறது. ஐ.டி.சி நிறுவனத்தின் 'ஆசீர்வாத்' ஆட்டாவைப் போல, இனி வால் மார்ட் அரிசி, ஸ்பென்சர் கத்தரிக்காய், மெட்ரோ அப்பளம் ஆகியவற்றை இனி நாம் சந்தையில் பார்க்கலாம்.

ஓட்டுக் கட்சிகளின் அறிவிப்புகள் மற்றும் வாக்குறுதிகளிலிருந்து நாம் ஒருபோதும் உண்மையைக் கண்டறிய முடியாது. அவர்களுடைய நடவடிக்கைகளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். சில்லறை வணிகத்தைத் திறந்து விடுவதற்கான அடித்தளம் பா.ஜ.க. ஆட்சியிலேயே போடப்பட்டு விட்டது. நகர்ப்புற நில உச்சவரம்பை பா.ஜ.க. நீக்கியது; ரியல் எஸ்டேட் தொழிலில் 100% அந்நிய மூலதனத்தை காங்கிரசு அரசு அனுமதித்தது. வாஜ்பாய் அரசு தங்க நாற்கரச் சாலை திட்டத்தை அறிவித்தது. 1.5 லட்சம் ரூபாய்க்கான சாலை அமைப்பு ஒப்பந்தத்தை பன்னாட்டு, தரகு முதலாளிகளுக்கு வழங்கியிருக்கிறது காங்கிரசு அரசு. இவையிரண்டும் வால் மார்ட் போன்ற பன்னாட்டு சில்லறை வணிக நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் கோரிக்கைகள். இந்த அடித்தளத்தின் மீதுதான் பல லட்சம் சதுர அடிப் பரப்பிலான ''ஷாப்பிங் மால்''கள் கட்டப்பட இருக்கின்றன. இந்தியாவின் 200 நகரங்களில் 50,000 கோடி செலவில் ''ஷாப்பிங் மால்''கள் கட்டும் பணி அடுத்த 5 ஆண்டுகளில் முடிந்து விடும் என்றும், சில்லறை வணிகத்தில் 100% பன்னாட்டுக் கம்பெனிகளை அனுமதித்தால் தங்கள் தொழில் மேலும் செழிக்குமென்றும் இந்திய ரியல் எஸ்டேட் முதலாளிகள் சங்கம் அரசைக் கோரியுள்ளது. சில்லறை வணிகர்களை ஒழிக்கத்தான் ''வாட்'' வரிவிதிப்பு முறை அறிமுகப் படுத்தப்பட்டது என்பது ஏற்கெனவே தெரிந்த விசயம்.

சில்லறை வணிகத்தில் 51% பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி என்ற அறிவிப்பை ஜனவரி 25-ஆம் தேதி அரசு வெளியிட்டது; 24-ஆம் தேதி அது குறித்து அமைச்சரவை விவாதித்தது; ஆனால், இந்த முடிவை முன்னறிந்து சில்லறை வணிகத்தில் ரிலையன்ஸ் நிறுவனம் குதிக்கப் போவதாவும், 3000 கோடி முதலீடு செய்யப்போவதாகவும் ஜனவரி 23-ஆம் தேதியன்றே அறிவித்தார் முகேஷ் அம்பானி. பாந்தலூன், ஷாப்பர்ஸ் ஸ்டாப், ஸ்பென்சர், ஃபுட் வேர்ல்ட், மெட்ரோ, வால் மார்ட் போன்ற நிறுவனங்கள் எல்லா நகரங்களிலும் நிலத்தை வளைத்து கட்டுமானப்பணிகளையும் தொடங்கி விட்டன. காய் - கனி - பால் - முட்டை விற்கவும், மளிகை - மருந்து - ஸ்டேசனரி விற்கவும், இரும்பு - மின்சார சாதனங்கள் இன்ன பிற பொருட்கள் விற்கவும் தனித்தனிக் கடைகள், துணி மணிகள் - நகைகள் உள்ளிட்ட நுகர்பொருட்கள் விற்க பிரம்மாண்டமான மால்கள்... எனத் தங்களது திட்டத்தையும் இவர்கள் அறிவித்து விட்டார்கள். சென்னை தி.நகரில் ''நில்கிரிஸ்'' என்ற உள்நாட்டுப் பல்பொருள் அங்காடி இருந்த இடத்தில் ''மை டாலர்'' என்ற அமெரிக்க நிறுவனமும் திரிநேத்ரா என்ற இந்திய நிறுவனமும் இணைந்த கடை வந்துவிட்டது. விவேக், வசந்த் அண்டு கோ போன்ற நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனக் கூட்டுக்காகக் காத்திருக்கின்றன.

ஒரு பேரழிவின் விளிம்பில் நிற்கிறது நாடு. இது சிறு வணிகர்களுக்கு மட்டுமேயான பிரச்சினை என்று யாரேனும் கருதினால் அது மடமை. விநியோகத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பன்னாட்டு ஏகபோகங்கள், நமது நாட்டின் விவசாய உற்பத்தியையும் சிறு தொழில் உற்பத்தியையும் முழுமையாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அழித்து விடும். பரம்பரை பரம்பரையாகத் தமது சொந்த உழைப்பால் விவசாயத்தையும், தொழிலையும், வணிகத்தையும் உருவாக்கிய மக்கள் கொத்தடிமைகளாக, கூலிகளாக, அதுவும் கிடைக்காத திக்கற்றவர்களாக மடிய நேரிடும். பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தில்கூடக் காணமுடியாத இந்தக் கொடுமைக்குப் பெயர்தான் மறுகாலனியாதிக்கம். இதனை முறியடிக்கத் தேவைப்படுவது முன்னிலும் வீரியமிக்க விடுதலைப் போராட்டம்!

● பாலன்


**இப்போது விற்பனையில்...**

**சுந்தர ராமசாமி:**
**இலக்கிய மேட்டிமைத்தனத்தினுள் ஒளிந்திருக்கும் அற்பவாத இதயம்**
**நினைவின் குட்டை கனவு நதி**

இந்நூல் சுந்தர ராமசாமியைப் பற்றியது மட்டுமல்ல; ''எவ்விதச் சித்தாந்தக் கலர் கண்ணாடியும் இன்றி அழகியல் பார்வை மற்றும் படைப்பு அனுபவத்தின் வழியாகத்தான் உண்மையைத் தரிசிக்க முடியும்'' என்று கூறும் ஜெயமோகன் உள்ளிட்ட எல்லா சு.ரா.க்களுக்குமானது. இலக்கிய உன்னதமென்று இவர்களால் பீற்றிக் கொள்ளப் படுபவையனைத்தும் உண்மையில் அற்பவாதத்தின் வெவ்வேறு அவதாரங்களே என்று நிறுவுகிறது இந்நூல்.

புதிய கலாச்சாரம் வெளியீடு — விலை: ரூ. 60/-

**நூல் கிடைக்குமிடங்கள்:**

புதிய கலாச்சாரம்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக்நகர்,
சென்னை - 83, ✆: 044-23718706

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 2.
✆: 044-28412367




படிப்பகம்

www.padippakam.com

● ஜனவரி இதழின் அட்டைப்பட விளம்பரமே அரசியல் ஆர்வலர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் வகையில் அருமையாக வெளிவந்துள்ளது. இப் ''புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி'' விளம்பரத்தையும் அட்டைப்படக் கட்டுரையையும் விளக்கிப் பிரச்சாரம் செய்தபோது பேருந்துகளில் பு.ஜ. இதழ் பரபரப்பாக விற்பனையாகியது. ஜெகந்நாபாத் சிறைத் தகர்ப்பு பற்றிய சி.பி.எம். தலைவர் யெச்சூரியின் துரோகத்தனத்தையும் கைக்கூலித்தனத்தையும் அம்பலப்படுத்திக் காட்டிய ''சிவப்பென்றால் சிலருக்கு பயம்! பயம்!!'' எனும் கட்டுரை சிறப்பு.

**– வாசகர்கள், திருப்பூர்.**

● நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தின் லட்சணத்தையும், எல்லா ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் இந்த அழுகிய பிணத்தை ஏன் கட்டிக் காத்து வருகின்றன என்பதையும் எடுப்பாக உணர்த்திய அட்டைப்படக் கட்டுரை சிறப்பு. எம்.ஜி.ஆர். நகரில் 42 பேரைப் படுகொலை செய்த பாசிச ஜெயாவின் கோரமுகத்தைக் கிழித்துக் காட்டிய புதிய ஜனநாயகப் புரட்சிகர அமைப்புகளின் செயல்பாடுகள் உணர்வூட்டி நம்பிக்கையளிக்கின்றன.

**– சுரேஷ்குமார், சென்னை.**

● எம்.ஜி.ஆர். நகரில் 42 பேர் பலியான சம்பவத்தை ஒரு சாதாரண விபத்தாகவும், மக்களின் பணத்தாசையால் ஏற்பட்ட சாவு என்றும் பத்திரிகைகள் அவதூறு செய்து மூடிமறைத்த வேளையில், இது பச்சைப் படுகொலை என்று உணர்த்தி, குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரிப் போராடிய புரட்சிகர அமைப்புகளுக்கு எனது நன்றியும் வாழ்த்துக்களும்.

**– ஜியேநேசன், குள்ளம்பட்டி.**

● நேரம் கிடைக்கும்போதெல்லாம் மார்க்சிய - பெரியாரிய சிந்தனைகளையும், புரட்சிகர இயக்கங்களையும் அவதூறு செய்து கொச்சைப்படுத்துவதையே பிழைப்பாக்கிக் கொண்டுள்ள தலித்திய 'மாமேதை' ரவிக்குமார், ''காலச்சுவடு'' என்ற பார்ப்பன இலக்கியப் பத்திரிகையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மார்க்சிய - லெனினிய அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் வழியாக வரும் ஏகாதிபத்திய சதியை எச்சரித்து துண்டறிக்கை வெளியிட்டதைப் பற்றி குறிப்பிட்டு, வேறெதுவும் செய்யாதது போல் ஏளனம் செய்திருக்கிறார். ஆனால், ரவிக்குமாரைப் போல வெறுமனே பேசுவதையும் எழுதுவதையும் மட்டுமே பிழைப்பாக்கிக் கொள்ளாமல், களத்தில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்றவரை நிவாரண உதவிகள் செய்து அரசுக்கும் அதிகார வர்க்கத்துக்கும் எதிராக அம்மக்களைத் திரட்டிப் போராடி வருவது மார்க்சிய-லெனினிய புரட்சிகர அமைப்புகள் மட்டும்தான். இந்த உண்மைகளை ''நிவாரணப் பணிகள் - போராட்டப் பணிகள்'' என்னும் செய்தித் தொகுப்பு எடுப்பாக உணர்த்தி ''காலச்சுவடு'' புரோக்கர் ரவிக்குமாரின் அண்டப்புளுகை அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**– மணிகோ. பன்னீர்செல்வம், நாகம்பட்டி.**




# வாசகர் கடிதம்

● நையாண்டி பாணியில் அமைந்த அட்டைப்படம் மிக அருமை. நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டிய, கேள்வி கேட்க லஞ்சம் வாங்கிய பன்றிகளுக்கு நாம் நன்றி சொல்லத்தான் வேண்டும்.

**– நாகராசன், கீழச்சீவல்பட்டி.**

● முதலாளித்துவ அறிவுஜீவிகளும், நாடாளுமன்ற மோசடி ஜனநாயகத்தை ஏற்றிப் போற்றும் ஓட்டுக் கட்சிகளும் எவ்வளவுதான் மூடிமறைத்தாலும் அதன் அழுகல் நாற்றத்தை தடுத்துவிட முடியாது என்பதை நெத்தியடியாய் விளக்கியது அட்டைப்படக் கட்டுரை. புரட்சிகர அரசியலுக்கே உரித்தான நையாண்டித்தனத்துடன் அட்டைப்படம் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

**– யாழினி, சென்னை.**

● அரசியலே வேண்டாம், எந்தவொரு துயரத்தையும் அரசியலாக்குகிறார்கள் என்ற நடுத்தர வர்க்கத்தின் தவறான கருத்தை முறியடித்து, அரசியல் பண்ணப் படுவதால்தான் அரைகுறையாகவாவது ஊழல் வெளியே வருகிறது என்ற உண்மையை தலையங்கக் கட்டுரை எடுப்பாக உணர்த்தியது.

**– நிர்மலா, திருச்சி.**

● நாளேட்டில் வரும் விளம்பரம் போல பு.ஜ. அட்டைப்படம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. அண்மையில் தஞ்சையில் நடைபெற்ற சி.பி.எம். கட்சியின் விவசாயப் பிரிவு மாநாட்டில், அணிகளை ஏமாற்றும் விதமாக கொல்கத்தாவில் இந்திய-அமெரிக்க போர் விமானக் கூட்டுப் பயிற்சியை எதிர்த்துப் போராடியதாக தலைவர்கள் சவடால் அடித்தனர். ஆனால், மறுநாள் தினத்தந்தி தஞ்சை பதிப்பில் (8.1.06) அமெரிக்கப் போர் விமானக் கூட்டுப் பயிற்சிக்கு மே.வங்க முதல்வர் பாதுகாப்பு அளித்து ஒத்துழைத்த செய்தி வெளிவந்து சி.பி.எம்.இன் புரட்சி முகமூடி கிழிந்தது. போதாக்குறைக்கு இம்மாநாட்டில், திரிபுரா மாநில முதல்வரான மாணிக் சர்க்கார், 'தமிழகப் புரட்சிக் கவிஞர்' ''மன்மதராசா'' யுகபாரதிக்கு சால்வை அணிவித்துப் பாராட்டினார். தஞ்சை நகர சி.பி.எம். செயலாளர் மகன்தான் யுகபாரதி என்று மாநாடு பெருமைப்பட்டுக் கொண்டது. இதர ஓட்டுக் கட்சிகளைப் போலவே பிழைப்புவாத பித்தலாட்டத்தில் மூழ்கி முத்துக் குளிக்கும் இப்போலி கம்யூனிஸ்டுகளைத் தொடர்ந்து அம்பலப்படுத்த வேண்டும்.

**– கரிகாலன், தஞ்சை.**

● பின் அட்டையில் வெள்ள நிவாரணத்தில் பலியானோரின் படத்தை அக்கோரத்தைக் காட்டும் வகையில் அமைத்திருக்க வேண்டும். அரசியல் பண்ணுவது தவறா? எனும் கட்டுரையில், பலியான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை பாசிச ஜெயா கட்டிப் பிடித்து ஆறுதல் நாடகமாடும் படத்தை வெளியிட்டிருக்கலாம். கட்டுரை ஏற்படுத்தும் உணர்வுக்கு ஏற்ப பொருத்தமான படங்களை வெளியிட முயற்சிக்க வேண்டும்.

**– கவிதாசன், வல்லம்.**

● கடந்த டிசம்பர் 31-ஆம் தேதியன்று மாலை எமது அமைப்பின் சார்பாக பேருந்துகளில் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது, அரசு ஊழியர் ஒருவர், எம்.பி.க்கள் லஞ்சம் வாங்கியது பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்டார். ''நாடாளுமன்றம் பன்றித் தொழுவம்; நாடாளுமன்றம் ஏமாற்று; மக்கள் சர்வாதிகார மன்றமே ஒரே மாற்று'' என்று நாங்கள் விளக்கிப் பிரச்சாரம் செய்தோம். மறுநாள், புதிய ஜனநாயகம் இதழின் அட்டைப்படம் ''நாடாளுமன்றம் விற்பனைக்கு! மலிவு விலையில் எம்.பி.க்கள்!'' என்ற விளம்பர முகப்புடன் வெளிவந்து அரசு ஊழியர்களிடம் பரபரப்புடன் வரவேற்பைப் பெற்றது. உரிய தருணத்தில் எடுப்பான அரசியல் அம்பலப்படுத்தலுடன் வெளியான பு.ஜ.வுக்கு எமது வாழ்த்துக்கள்!

**– தமிழ்ச்செல்வி, வி.வி.மு.,**
**பென்னாகரம்**

● அட்டைப்பட விளம்பர வாசகங்களைப் படித்து, சிரித்து பலர் ஆர்வத்தோடு பு.ஜ. இதழை வாங்கி, நீங்கள் சொல்வது சரிதான் என்று பாராட்டியுள்ளார்கள். சுனாமி, வெள்ளம் முதலான இயற்கை பேரிடர் ஏற்படும்போது அரசியல் பண்ணுவது தவறு; மனிதாபிமானம் தான் சரியானது என்றிருந்த எமது தவறான கருத்துக்களைக் களைந்து கொள்ள தலையங்கக் கட்டுரை பெரிதும் உதவியது.

**– வாசகர்கள், பாடாலூர்.**

● எம்.பி.க்கள் லஞ்சம் வாங்கியது சரியா, தவறா என்று பத்திரிகைகள் சூடாக விவாதித்த நேரத்தில், நாடாளுமன்ற ஜனநாயகமே எப்படி மோசடியானது என்று புதிய கோணத்தில் அம்பலப்படுத்திய அட்டைப்படமும் கட்டுரையும் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

**– வாசகர் வட்டம், திருச்சி.**

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/CC(S)Dn/190/06-08

மார்ச் 23
பகத்சிங்
நினைவு நாளில்



தமிழகமெங்கும்

கோக் மற்றும்
பன்னாட்டு நிறுவனப் பொருட்கள்

# எரிப்புப் போராட்டம்

பொங்கி எழட்டும் சுதந்திர வேட்கை!
பொசுங்கி அழியட்டும் மறுகாலனியாதிக்கம்!

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**

படிப்பகம்